# புதியதொரு விதி செய்வோம்



கவியரசர் முடியரசன்

தமிழ்மண் பதிப்பகம்

முடியரசன் பதிப்பகம்

காரைக்குடி

பேசி: 9965706699, 9788804480

# புதியதொரு விதி செய்வோம்

கவியரசர்

முடியரசன்

**தமிழ்மண் பதிப்பகம்**

113, கௌடியா மடம் சாலை,

இராயப்பேட்டை,

சென்னை–600 014

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | புதியதொரு விதி செய்வோம்.... |
| ஆசிரியர் | : | கவியரசர் முடியரசன் |
| முதல் பதிப்பு | : | திருவள்ளுவர் ஆண்டு 2030 (திசம்பர் 1999) |
| உரிமை | : | கலைச்செல்வி முடியரசன்<br>19, மூன்றாம் வீதி, காந்திபுரம்,<br>காரைக்குடி – 630 001. |
| வெளியீடு | : | தமிழ்மண் பதிப்பகம்,<br>113/ கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை–600 014. |
| பொருள் | : | பாடல்கள் |
| தாள் | : | 13.6 கி.கி |
| நூல் வடிவம் | : | கிரவுன் |
| பக்கம் | : | 112 |
| கணினி அச்சு | : | சிபி கணினி மையம்<br>சென்னை – 600 005. |
| அச்சு | : | அன்னம் மறுதோன்றி அச்சகம்,<br>25, சி.என். கே. சாலை,<br>சேப்பாக்கம், சென்னை – 600 005.<br>✆ : 8588466 |
| விலை | : | உருபா 25/– |

# பதிப்புரை

கவியரசர் முடியரசன்
வள்ளுவனின் குறளியத்தை
வாழ்வியல் நெறியாகக் கொண்டு
வாழ்ந்தவர்.
மாபெருங்கவிஞன் பாரதி
பாவேந்தர் பாரதிதாசன்
வழித்தோன்றல்.
பெருந்தலைவர் பெரியார்
பேரறிஞர் அண்ணா
வழியாகவும், விழியாகவும்
கொண்டவர்.
தன்மான இயக்கத்தின்
தனிபெருங்கவிஞர்.
தாய்மொழியாம் தமிழுக்கு
அரணாக இருந்தவர்.
மொழி, இனம், நாடு
உயிர்மூச்சாய்க் கொண்டவர்.
இந்நூலுள்...
நாடாளும் வேந்தரும்
வீடாளும் மாந்தரும்
காவியுடைத் துறைவியரும்
உழவனுக்கு அடக்கம்.
உழவே தலைத்தொழில்

உழுவார் உலகத்தார்க்கு
அச்சாணி.
மாற்றுவோம் உலகை
பூக்கட்டும் பொதுவுடைமைக்
கொள்கை.
இனியதமிழ் அரியணையில்
அமரட்டும்.
சிங்க மகனே!
தமிழினத்தின் பெருமையைத்
திரும்பிப்பார்! வரிப்புலியே!
வரிந்துகட்டி நில்! சினந்தெழு!

எனும் வரிகள் இளந்தலை முறைக்கு எழுச்சி உரையாக அமைந்தவை.

முனைவர் இளவரசு:-

அஞ்சா நெஞ்சினர், நேர்மை உணர்வினர், தனித்தமிழ் இயக்க மறவர்களுக்கு வேராக இருப்பவர். வாழும் இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டும் ஒளி விளக்கு. இந்நூல் வெளிவர ஆக்கமும் ஊக்கமும் தந்த பெருமைக்குரியவர். அவருக்கு எம் நன்றி.

பாரி:-

தந்தையின் கொள்கைகளைத் தன் நெஞ்சில் ஏந்திய திருமகன். இந்நூலை வெளியிட தோன்றாத்துணையாக இருந்தவர். அவருக்கும் எம் நன்றி. தமிழ்க் குமுகாயம் இந்நூலைப் படித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

**தமிழ்மண் பதிப்பகத்தார்.**

# முன்னுரை

கவியரசர் முடியரசனாரின் கவிதைகள், தமிழ், தமிழர் வளர்ச்சிக்கு மிகவும் எழுச்சியூட்டுவனவாயும், சமுதாயச் சீர்திருத் தத்திற்குத் தூண்டுகோலாயும் அமைவன ஆகும். ஏற்றுக்கொண்ட கொள்கைகளைக் கவிதைகளின் மூலம், ஊருக்கு மட்டும் அறிவுரை கூறாமல், தானும் அவ்வழி வாழ்ந்துகாட்டியும், பகுத்தறிவுக் கொள்கைகளின்படி சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டும், தன் பிள்ளைகட்கும் சாதி மறுப்புத் திருமணம் செய்து வைத்தும் சிறந்தவர் கவிஞர் முடியரசன் அவர்கள்.

இத்தொகுப்பில், கவிஞர் தமிழ், தமிழர் முன்னேற்றத்துக்கு எழுப்பும் அறைகூவல் மட்டுமல்லாது, தமிழகத்தில் பொது உடைமை மலரவும், மனித நேயம் வளரவும், உழைக்கும் மக்கள் உயரவும் பாடிய பாடல்களும், சாதி, மத அடிமை விலங் கொடித்துத் தமிழ்நாடு உண்மையான ஒருமைப்பாடு காண விரும்பும் பாடல்களும், மூடநம்பிக்கையிலிருந்து மக்கள் விடுதலை பெறவும், எழுதியுள்ளார்.

எந்தை இயற்கையடைவுக்குப் பிறகு இந்நூல் வெளி வருகிறது. இந்நூல் வெளிவர உதவிய பேராசிரியர் முனைவர் திரு.இரா.இளவரசு அவர்கட்கும், தமிழ்மண் பதிப்பக உரிமை யாளர் தமிழ் மொழிக் காவலர் திரு. கோ. இளவழகன் அவர்கட்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

19,3ஆம் வீதி,
காந்திபுரம்,
காரைக்குடி–630 002

அன்பன்,
மு.பாரி.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஏடெடுத்தேன் பாட்டெழுத | 16 |
| 2. | புதியதொரு விதி செய்வோம் | 22 |
| 3. | பகடைக் காய் | 25 |
| 4. | ஏர் நின்றால் | 28 |
| 5. | பொதுமை காண்போம் | 29 |
| 6. | பூக்கட்டும் புதுமை | 30 |
| 7. | யாவும் பொதுமையடா | 32 |
| 8. | உலகை மாற்றுவோம் | 33 |
| 9. | துன்பத்துடிப்பு | 35 |
| 10. | தீ பரவட்டும் | 37 |
| 11. | திரும்பிப் பார் | 39 |
| 12. | அந்நாள் எந்நாள்? | 41 |
| 13. | சிறுத்தையே விழித்தெழு | 43 |
| 14. | தமிழின வரலாறு | 46 |
| 15. | இன்றைய நாடு | 51 |
| 16. | ஆரியப் பேரரசு | 53 |
| 17. | தமிழக அரசு | 55 |
| 18. | திருக்குறள் நம் மறை | 61 |
| 19. | ஒருமைப் பாடு | 63 |

௨0. ஒற்றுமையும் ஒருமையும் 64

௨1. ஒற்றுமை உருப்படுமா? 65

௨௨. எங்கே தமிழன்? 66

௨3. தமிழனா? இந்தியனா? 67

௨4. என் குறிக்கோள் 68

௨5. ஏற்றம் பெறுமா இந்தியா? 69

[illegible] ——— 70A

௨6. கண்ணீர்ப் பொங்கல் 71

௨7. பொங்கல் விழா 73

௨8. தீப்பொறி 81

௨9. நீர்ப் பானை ஓட்டையானால் 83

30. விண்வெளிப் போருக்கா விஞ்ஞானம் 85

31. சான்றோர் செய்த பிழை 87

3௨. தேர்தல் நினைவு 88

33. விழா மட்டும் போதுமா? 90

34. நன்றி காட்டுக 92

35. கண்ணீரை யார் துடைப்பார் 95

36. இன்பம் எது? 99

37. தட்டி எழுப்பிய தலைவர்கள் 104

# கவியரசர் முடியரசன்

## வாழ்க்கைக் குறிப்பு

**இயற் பெயர்**
துரைராசு

**பெற்றோர்**
சுப்புராயலு – சீதாலெட்சுமி

***பிறந்த ஊர்***
பெரியகுளம்

**வாழ்ந்த ஊர்**
காரைக்குடி

***தோற்றம்***
7.10.1920

**மறைவு**
3.12.1998

***கல்வி***
பிரவேச பண்டிதம்
வித்துவான்

**தமிழாசிரியர் *பணி***
சென்னை (1947– 49).
காரைக்குடி (1949 – 78)

***திருமணம்***
2.2.1949

***துணைவியார்:***
கலைச்செல்வி

| ***மக்கள்:*** | ***மருமக்கள் :*** | ***பேரப்பிள்ளைகள்:*** |
|---|---|---|
| குமுதம் | பாண்டியன் | அருள்செல்வம், திருப்பாவை |
| பாரி | பூங்கோதை | ஓவியம் |
| அன்னம் | சற்குணம் | செழியன், இனியன் |
| குமணன் | தேன்மொழி | அமுதன், யாழிசை |
| செல்வம் | சுசீலா | கலைக்கோ, வெண்ணிலா |
| அல்லி | பாண்டியன் | முகிலன் |

# இயற்றிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | முடியரசன் கவிதைகள் | (கவிதைத் தொகுதி) .............. | 1954 |
| 2. | காவியப் பாவை | (கவிதைத் தொகுதி)............... | 1955. |
| 3. | கவியரங்கில் முடியரசன் | (கவிதைத் தொகுதி) .............. | 1960 |
| 4. | பாடுங்குயில் | (கவிதைத் தொகுதி) .............. | 1983 |
| 5. | நெஞ்சு பொறுக்கவில்லையே | (கவிதைத் தொகுதி) .............. | 1985 |
| 6. | மனிதனைத் தேடுகிறேன். | (கவிதைத் தொகுதி) .............. | 1986 |
| 7. | தமிழ் வழிபாடு | (கவிதைத் தொகுதி) .............. | 1997 |
| 8. | தமிழ் முழக்கம் | (கவிதைத் தொகுதி) .............. | 1999 |
| 9. | நெஞ்சிற் பூத்தவை | (கவிதைத் தொகுதி) .............. | 1999 |
| 10. | ஞாயிறும் திங்களும் | (கவிதைத் தொகுதி) .............. | 1999 |
| 11. | தாய்மொழி காப்போம் | (கவிதைத் தொகுதி) | 2001 |
| 12. | புதியதொரு விதி செய்வோம் | (கவிதைத் தொகுதி) .............. | 1999 |
| 13. | வள்ளுவர் கோட்டம் | (கவிதைத் தொகுதி) .............. | 1999 |
| 14. | மனிதரைக் கண்டுகொண்டேன் | (கவிதைத் தொகுதி) | 2005 |
| 15. | பூங்கொடி | (காப்பியம்) .............................. | 1964 |
| 16. | வீர காவியம் | (காப்பியம்) .............................. | 1970 |
| 17. | ஊன்று கோல் | (காப்பியம்) .............................. | 1983 |
| 17. | [illegible] | | 2008 |
| 18. | கவியரசர் முடியரசன் கடித இலக்கியம் (அன்புள்ள பாண்டியனுக்கு – இளவரசனுக்கு) | (கடித இலக்கியம்) ................. | 1999 |
| 19. | எப்படி வளரும் தமிழ் | (கட்டுரை) | |
| 20. | எக்கோவின் காதல் | (சிறுகதைகள்)......................... | 1999 |
| 21. | சீர்திருத்தச் செம்மல் வை.சு.சண்முகனார் | (கட்டுரை) .......................... | 1990 |
| 22. | பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம் | (தன் வரலாறு) | 2008 |
| 23. | [illegible] | [illegible] | 1975 |

(மேற்குறிப்பிட்டவை வெளிவர வேண்டியவை ஆகும்.)

24. [illegible] — 1967

# இயற்றிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | முடியரசன் கவிதைகள் | (கவிதைத் தொகுதி) .............. | 1954 |
| 2. | காவியப் பாவை | (கவிதைத் தொகுதி)............... | 1955. |
| 3. | கவியரங்கில் முடியரசன் | (கவிதைத் தொகுதி) .............. | 1960 |
| 4. | பாடுங்குயில் | (கவிதைத் தொகுதி) .............. | 1983 |
| 5. | நெஞ்சு பொறுக்கவில்லையே | (கவிதைத் தொகுதி) .............. | 1985 |
| 6. | மனிதனைத் தேடுகிறேன். | (கவிதைத் தொகுதி) .............. | 1986 |
| ~~7.~~ | ~~தமிழ்வழிபாடு~~ | ~~(கவிதைத் தொகுதி) ..............~~ | ~~1997~~ |
| 8. | தமிழ் முழக்கம் | (கவிதைத் தொகுதி) .............. | 1999 |
| 9. | நெஞ்சிற் பூத்தவை | (கவிதைத் தொகுதி) .............. | 1999 |
| 10. | ஞாயிறும் திங்களும் | (கவிதைத் தொகுதி) .............. | 1999 |
| 11. | தாய்மொழி காப்போம் | (கவிதைத் தொகுதி) | |
| 12. | புதியதொரு விதி செய்வோம் | (கவிதைத் தொகுதி) .............. | 1999 |
| 13. | வள்ளுவர் கோட்டம் | (கவிதைத் தொகுதி) .............. | 1999 |
| 14. | மனிதரைக் கண்டுகொண்டேன் | (கவிதைத்தொகுதி) | |
| 15. | பூங்கொடி | (காப்பியம்) .............................. | 1964 |
| 16. | வீர காவியம் | (காப்பியம்) .............................. | 1970 |
| 17. | ஊன்றுகோல் | (காப்பியம்) .............................. | 1983 |
| 18. | கவியரசர் முடியரசன் கடித இலக்கியம் (அன்புள்ள பாண்டியனுக்கு – இளவரசனுக்கு) | (கடித இலக்கியம்) ................ | 1999 |
| 19. | எப்படி வளரும் தமிழ் | (கட்டுரை) | |
| 20. | எக்கோவின் காதல் | (சிறுகதைகள்)......................... | 1999 |
| 21. | சீர்திருத்தச் செம்மல் வை.சு.சண்முகனார் | (கட்டுரை) ...................................... | 1990 |
| 22. | பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம் | (தன் வரலாறு) | |

~~(மேலே குறிப்பிட்டவை வெளிவர வேண்டியவை ஆகும்.)~~

# தேடிவந்த சிறப்புகள்

(விருது, பட்டம், பரிசு – வழங்கியவர், இடம், ஆண்டு)

'அழகின் சிரிப்பு' என்ற கவிதைக்கு முதல் பரிசு – பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழ் மாநாடுங, கோவை – 1950

- 'திராவிட நாட்டின் வானம்பாடி' பட்டம்– பேரறிஞர் அண்ணா – 1957.
- 'கவியரசு' பட்டம், பொற்பதக்கம் – குன்றக்குடி அடிகளார், பாரி விழா, பறம்பு மலை – 1966
- 'முடியரசன் கவிதைகள்' நூலுக்குப் பரிசு – தமிழ்நாடு அரசு – 1966
- 'வீர காவியம்' நூலுக்குப் பரிசு – தமிழ்நாடு அரசு – 1973.
- 'நல்லாசிரியர்' விருது, வெள்ளிப் பதக்கம் – கே.கே. ஷா, ஆளுநர், தமிழ் நாடு அரசு – 1974.
- 'சங்கப்புலவர்' பட்டம் – குன்றக்குடி அடிகளார் – 1974.
- 'பாவரசர்' பட்டம், பொற்பேழை – ஞா. தேவநேயப் பாவாணர், உலகத் தமிழ் கழகம், பெங்களூர் – 1979
- 'பொற்கிழி' – பாவாணர் தமிழ்க் குடும்பம்,. நெய்வேலி – 1979.
- 'பொற்குவை' – ரூ.10,000,– மணிவிழா எடுப்பு – கவிஞரின் மாணாக்கர்கள் – காரைக்குடி – 1979
- 'பொற்கிழி' – பாரதியார் நூற்றாண்டு விழாக்குழு, சிவகங்கை
- 'கவிப் பெருங்கோ' பட்டம், பொற்கிழி ரூ.10,000,– மணிவிழா எடுப்பு –கலைஞர் மு.கருணாநிதி, தி.மு.க. மாநில இலக்கிய அணி, சென்னை – 1980

- 'தமிழ்ச் சான்றோர்' விருது , பதக்கம் – தமிழகப் புலவர் குழு, சேலம் – 1983.
- 'கலைஞர் விருது' – என்.டி. இராமராவ், ஆந்திர முன்னாள் முதலமைச்சர்,
  கலைஞர் மு.கருணாநிதி, தி.மு.க.முப்பெரும் விழா, சென்னை – 1988
- ' பாவேந்தர் விருது' (1987 க்குரியது), பொற்பதக்கம், கலைஞர் மு. கருணாநிதிஇ முதல்வர், தமிழ்நாடு அரசு, சென்னை – 1989
- 'பொற்கிழி' – விக்கிரமன்– அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர், காரைக்குடி கவிஞர் இல்லம் – 1993
- 'பூங்கொடி' நூலுக்கு இந்திராணி இலக்கியப் பரிசு ரூ.5,000,– இந்திராணி அறக்கட்டளை, கரூர்–1993
- 'சிறந்த தமிழ்த் தொண்டிற்கான' அரசர் முத்தையவேள் நினைவுப் பரிசில்– வெள்ளிப் பேழை, பொற்குவை ரூ. 50,000,– அண்ணாமலை அரசர் நினைவு அறக்கட்டளை, சென்னை – 1993.
- 'இராணா இலக்கிய விருது', பொற்குவை ரூ.10,000,– தமிழ் இலக்கியப் பேரவை, ஈரோடு – 1994.
- 'கல்வி உலகக் கவியரசு' விருது – அகில இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், (அழகப்பா பல்கலைக் கழகம்) காரைக்குடி – 1996

- 'பொற்கிழி' பழைய மாணவர் பாராட்டு விழா, கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி – 1997
- 'கலைமாமணி' விருது – பொற்பதக்கம் – செல்வி பாத்திமா பீவி, ஆளுநர், கலைஞர் மு.கருணாநிதி, முதலமைச்சர், தமிழ்நாடு அரசு, சென்னை – 1998.

## பிற குறிப்புகள்

- 21ஆம் அகவையில் இயற்றிய 'சாதி என்பது நமக்கு ஏனோ?' என்ற கவிதையே முதல்முதலில் அச்சு வாகனம் ஏறியது. இது பேரறிஞர் அண்ணாவால் திராவிட நாடு இதழில் வெளியிடப் பட்டது (1940).
- தந்தை பெரியாரின் தன்மான இயக்கத் தொடர்பு (1940)
- "சாதி மறுப்புத் திருமணம் செய்யவாவது இசைவு கொடுங்கள்" என அன்னையாரிடம் வேண்டுதல், பெற்றோர் இசைதல். பெற்றோர் மூலம் "கலைச்செல்வி" எனும் நலத்தகையாரை பேராசிரியர் மயிலை சிவமுத்து தலைமையில் சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டார் (1949)
- திருமணமான ஆண்டே தமது துணைவியாருடன் இந்தி எதிர்ப்புப் போரில்பங்கேற்றார் (1949)
- கலப்புத் திருமணத்தின் தேவையைப் பற்றிக் கவிதை பல பாடியதோடு இருந்து விடாமல் தாமும் கலப்புத் திருமணம் செய்து

கொண்டு, தம் பிள்ளைகள் அனைவருக்கும் அவ்வாறே செய்துவித்துத் தம் கொள்கைக்கு வெற்றி தேடித்தந்ததன் மூலம் அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் என்னும் வள்ளுவன் வாக்கைத் தோல்வியுறச் செய்தார்.

- காரைக்குடியில் மீ.சு. உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியர் பணியேற்றார் (1949)
- 'முடியரசன்........எனக்குப் பின் கவிஞன்', எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் பாராட்டப் பெற்றார் (1950)
- இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டதாகக் காவல் துறையினர் வழக்கு (1965)
- கவிஞரது கவிதைகள் பல சாகித்திய அகாதமியால் இந்தியிலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. கன்னடத்திலும், உருசிய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.
- கவிஞரது நூல்கள் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் பாடநூல்களாக வைக்கப்பட்டுள்ளன. பல்வேறு பல்கலைக் கழகங்களில் இவர்தம் நூல்கள் 'முனைவர்' மற்றும் 'எம்.ஃபில்' பட்டத்திற்காகவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.
- 'கவியரசர் முடியரசனார் முத்தமிழ் மன்றம்' என்னும் பெயரில் புலவர் தி.மு. அரசமாணிக்கம் என்பார், ஈரோட்டில் மன்றம் அமைத்துத் தமிழ்த்தொண்டு செய்து வருகிறார்.

# சிறப்பியல்புகள்

வள்ளுவர் நெறியில் வாழ்ந்தவர், சொல்லும் செயலும் ஒத்த வாழ்வினர், வறுமையிலும் செம்மை போற்றியவர், திமிர்ந்த ஞானச் செருக்குடைய சங்கப் புலவரனையர், சங்கத் தமிழனைய தூயவர், பீடுநடையினர், பெருமித வாழ்வினர், நிமிர்ந்த நடையினர், நேர் கொண்ட பார்வையர், அண்டிப்பிழையார். ஆர்த்த வாழ்வினர், ஒட்டார் பின் செல்லாதவர், நல்லாசிரியர், ஆசிரியர் போற்றுபவர், நன்றி மறவாதவர், நட்புப்பெரிதென வாழ்ந்தவர், பகுத்தறிவாளர், மனிதநேயர், பழகுதற்கினிய பண்பாளர், பிறர்க்குதவும் ஏந்தல், சாதி தொலைத்தவர், சமயம் அறுத்தவர், பதவி வெறுத்தவர், சமத்துவம் விரும்பி, விளம்பரம் விரும்பார், எளிமை வாழ்வினர், புகழ் கண்டு கூசுவார். அன்பு நெஞ்சினர். குழந்தை உள்ளத்தினர், பூமனத்தினர், இனிமைப் பேச்சினர், இளமை விரும்பி, அமைதி விரும்பி, குறிக்கோள் வாழ்வினர்.

இடர்ப்பாடுகளும், இன்னல்களும் வந்தபோதும் கொண்ட கொள்கையிலிருந்து இறுதிவரை வழுவாமல் தடம்புரளாத் தங்கமாக திகழ்ந்தவர்.

**தமது வாழ்நாளில் இறுதியாக அவர் இயற்றிய கவிதை**

*வாளால் பிளப்பினும் வாழ்நாள் இழப்பினும் வஞ்சமனக்*
*கேளார் குழுமிக் கெடுதிகள் சூழினும் பூமியில்வாழ்*
*நாளெலாம் வாட்டும் நலிவே உறினும் நற்றமிழே*
*ஆளாதல் திண்ணம் அடியேன் நினது மலரடிக்கே.*

தொகுப்பு :
கவியரசர் முடியரசனார் முத்தமிழ் மன்றம்
ஈரோடு.

# தமிழ் வாழ்த்து

கற்பவர் நெஞ்சில் எல்லாம்
    களிப்பினை ஊட்டும் தாயே!
முற்படும் மொழிகட் கெல்லாம்
    மூத்தவள் எனினும் நின்னைப்
பற்றிய இளமை குன்றாப்
    பைந்தமிழ் அன்னாய் என்று
சொற்றிடல் தவிர வேறு
    பற்றுகள் இல்லேன் அம்மா!

-முடியரசன்

# ஏடெடுத்தேன் பாட்டெழுத...

## கலிவெண்பா

சூடெடுத்த வெங்கதிரோன் சுட்டெரிக்குங் காரணத்தால்
ஓடடுக்குஞ் சிற்றில் உலைபோலத் துன்புறுத்தத்
தோடுடுத்த பூமலருஞ் சோலைக்குட் புக்கிருந்
தேடெடுத்தேன் பாட்டெழுத, எல்லையிலா எண்ணங்கள்
ஓரா யிரமாகி ஓயாக் கடலலைபோல்
நேரே எழுந்தெழுந்து நெஞ்சத்தைப் பற்றிநின்
றொன்றையொன்று முந்துவதால் ஒன்றும் புரியாமல்
நின்றிருந்தேன்; பின்னர் நினைவெல்லாம் ஒன்றாகி
மின்னல் ஒளிபோல மேலோங்கும் ஒருணர்ச்சி
என்னுட் பளிச்சிட் டெழுந்து பரந்ததுகாண்;
ஊற்றுப் புனல்போல ஊறிவரும் அவ்வுணர்ச்சி
ஆற்றுப் பெருக்கேபோல் ஆர்த்தெழுந்து மேலோங்க
மண்ணிற் பிறந்த மனநிலையை விட்டொழித்து
விண்ணிற் சிறகடித்து விர்ரென் றெழுவதுபோல்
எங்கும் பறந்தேன்; இணையில்லா இன்பநிலை
பொங்கித் ததும்பப் புதுநறவம் மாந்தி
மயங்கிக் களித்தேன் மனம்மயங்கும் வேளை
வயங்கித் திகழுமெழில் வட்ட முழுமதியம்
ஆடிச் சிரிக்கும் அழகிகழைக் கூத்தியைப்போல்

பாடித் தெருவலையும் பாடகியைப் போல்விளங்கக்,
கோலக் கருவானங் கூத்தன் விரித்துவைத்த
நீலத் துகில்போல நின்றங்குக் காட்சிதரக்,
கண்டு களித்தோர் கையால் விசிறிவிட்ட
மண்டுவெள்ளிக் காசுகள்போல் வான்வெள்ளிக் கூட்டங்கள்
மின்னிக் கிடக்கஎழில் மேல்வானிற் கண்டிருந்தேன்
என்னைத் தொடர்ந்துவரும் இன்பத்தை என்னென்பேன்!
தேர்போகுங் காட்சியெனச் சேர்ந்தொன்றாய் ஊர்ந்துவரும்
கார்மேகக் கூட்டங் கனத்த மழைபொழியத்
தோகை, மயிலானேன் துள்ளும் மனத்தகத்தே
ஓகை மிகவாகி ஒவென்று கூவிக்
குளித்தேன் அதனால் குதித்தேன் அகத்தே
களித்தேன் அதுதான் கணக்கில் அடங்காது;
நீரால் நனைந்தமையால் நெஞ்சம் மிகக்குளிர்ந்தேன்;
ஆரா இனிமைதரும் அவ்வுலகில் நின்றபடி
நீணிலத்தை நோக்க நினைந்தேன் அடடாஓ
காணலுற்ற காட்சியினாற் கண்ணின் பயன்பெற்றேன்!
பச்சைப் பசுங்கொண்டல் பாவிவரும் நீள்முகட்
டுச்சிப் பனிமலைகள், ஓங்கு பெருவிலங்கல்,
தாவிக் குதித்துத் தடம்புரளும் வெள்ளருவி
மேவித் திரண்டுருண்டு மேதினியில் ஓடிவந்து
குன்றா வளஞ்சுரந்து கோலங்கள் செய்துவரும்
பொன்றாப் புனலாறு, பூமகளைப் போர்த்திருக்கும்
பட்டாடை என்னப் படர்ந்திருக்கும் நெற்கழனி,
முட்டாது தேன்சுரக்கும் மொய்ம்மலர்சூழ் பூஞ்சோலை,
சோலைக் கனிகொறிக்கத் துள்ளும் அணிற்கூட்டம்,

வாலைப் பிடித்திழுத்து வம்புசெயும் வானரங்கள்,
கூவுங் குயிலினங்கள், கோல மயிலினங்கள்
யாவும் இருவிழியால் யான்கண்டேன்;கண்டவற்றை
ஓவியம்போல் ஒப்பற்ற காவியத்தில் ஆக்கஎழும்
ஆவலினாற் பாட்டெழுத ஏடெடுத்தேன் அவ்வேளை,
குன்றக் குறமகளோ? கோலக் கடலலைகள்
நின்றலையும் நெய்தல் நிலமகளோ? ஆர்கலிசூழ்
தண்மருதப் பெண்மகளோ? தாவுங் கொடிமுல்லைக்
கண்மருவும் ஆரணங்கோ? கண்டறியேன் ஆரணங்கோ!
கட்டழகுப் பெட்டகமாய்க் கண்கவருங் காரிகையாய்ப்
பொட்டழகுங் கார்கூந்தற் கட்டழகுங் கொண்டவளாய்
வஞ்சி ஒருத்தியங்கு வந்தருகில் நின்றெனது
நெஞ்சி லிடங்கொண்டாள் நின்றவளை நான்கண்டேன்;
கொஞ்சுங் கிளிமொழியாள்,கொவ்வைச்செவ் வாயிதழாள்,
விஞ்சும் எழில்கூட்டும் வேல்விழியாள், அன்னத்தை
அஞ்சவைக்கும் மென்னடையாள், ஆடும் மயிலினத்தைக்
கெஞ்சவைத்த சாயலினாள் என்னைக் கிரங்கவைத்தாள்;
அன்னவளை இன்பமிகும் என்னவளைக் கையிரண்டும்
மின்னவளை பூண்டவளை என்னுளத்தை ஆண்டவளை
மாலை புனைந்து மணங்கொள்ள நான்நினைந்து
சேலை நிகர்த்தவிழிச் சிற்றிடையாள் காதலையே
நாடோறும் பாடி நலந்துய்க்க வேண்டுமெனுஞ்
சூடேறி ஏடெடுத்துச் சொற்றமிழிற் பாட்டெழுதிக்
கொட்டிக் குவித்தேன், குலமனைவி காதலையும்
மட்டுப் படுத்தும் மனநிலையைத் தந்துவிட்டாள்;
பிள்ளைக் கனியமுது பெற்றெடுத்தாள் ஆதலினால்

உள்ளத்துள் எல்லாமவ் வோவியத்தின் நல்லுருவே
பற்றிப் படர்ந்தென்னைப் பாசத்தாற் கட்டுறுத்திச்
சுற்றி வளைத்துள்ளம் சொக்கிவிடச் செய்ததுகாண்;
செக்கச் சிவந்திருக்கும் செவ்விதழின் வாய்மலர்ந்து
பொக்கைச் சிரிப்பொன்று பூத்திருக்கும் அம்முகத்தில்;
விஞ்ஞானம் மேலோங்கி வீறிட் டெழும்நேரத்
திஞ்ஞாலம் நான்பிறந்தேன் என்னுங் கருத்தோடு
விண்ணிற் சிறகடித்து வெட்ட வெளிபறக்க
எண்ணிக் குதிக்க எழுவான்போற் கைகால்கள்
ஆட்டிப் படைக்கும் அழகெல்லா மென்மனத்தை
ஆட்டிப் படைத்தனகாண்; ஆன்றவிந்த சான்றோர்க்கும்
சொன்னால் விளங்காத துய்யமறை போலுமொழி
என்னால் மறக்க இயலுவதோ? அம்மொழியைக்
கேட்காத காதென்ன காதோ? திருமுகத்தைப்
பார்க்காத கண்ணாற் பயனுண்டோ? அம்மகவு
கால்நலிந்து தள்ளாடக் கைகள் அசைந்தாட
மேல்நடந் தென்னருகில் மெல்ல வரும்போது
யார்நடம் ஒப்பாகும்? ஓர்நடமும் ஒப்பில்லை;
சீர்நடையன் என்தோளைச் செங்கையாற் றீண்டுங்காற்
சொல்லரிய இன்பமெனைச் சூழ்ந்துவரும்; தோள்பற்றி
மெல்லிதழாற் கன்னத்தின் மேற்பதித்த முத்திரைகள்
அப்பப்பா பேரின்பம்! அன்றைக் கவள்தந்தது-
ஒப்பப்பா என்றால் ஒருநாளும் ஒவ்வாதே;
இவ்வண்ணம் யான்கண்ட இன்பமெலாம் ஏடெடுத்துக்
கைவண்ணங் காட்டிக் கவிபுனைந்தே இன்புற்றேன்;
ஆனாலும் என்மனத்தே ஆர்வம் அடங்கவிலை

ஏனோ எனமயங்கி ஏங்கிக் களைத்திருந்தேன்;
ஒன்றென் மனத்தே உருவாகக் கண்டுணர்ந்தேன்
என்றும் நிலைக்கும் எழில்மேவுங் காப்பியமே
ஒன்று படைக்க உளங்கொண்டேன் ஏடெடுத்தேன்
அன்றுகடன் காரர் அனைவருமே வந்துநின்றார் ;
ஒன்றும் புரியவிலை ஓர்வரியும் ஓடவிலை
என்று தொலையுமடா இக்கடன்கள் என்றுழன்றேன்;
ஆங்கே ஒருத்தி அரியகுரல் தந்துநின்றாள்
'ஈங்கே வறுமை இருக்கும்வரை காப்பியமோ?
ஏழைஎனச் செல்வரென எத்தரெனப் பித்தரெனப்
பாழும் உலகிற் படைத்துவைத்த தீங்குகளும்,
தாழ்ச்சி உயர்ச்சி தகுபிறப்பில் உண்டென்று
சூழ்ச்சித் திறனுடையார் சொல்லிவரும் நீதிகளும்,
ஓயாமல் என்றும் உழைப்போரும் அவ்வுழைப்பாற்
சாயாமல் நின்று சதிசெய்து வாழ்வோரும்
இன்றும் இருப்பதற்கே எண்ணும் மடமைகளும்
கொன்று குவிப்பதற்கே கூர்வாள்போல் ஏடெடுத்துப்
பாட்டெழுத வேண்டுமடா பாடுந் தமிழ்மகனே
வேட்டெழுந்து பாவரைந்தால் வெங்கொடுமை மாளுமடா,
நாட்டைக் களமாக்கி வேட்டைத் தொழில்புரிந்த
கூட்டத்தார் செய்யுங் கொடுமைஎலாம் போய்மறைய
மண்ணோடு மண்ணாய் மடிந்துவிடப் பாட்டெழுது!
கண்ணாக எண்ணிக் கடமைசெயுந் தொண்டர்களை
ஆளும் பொறுப்பில் அமர்த்தி அவர்கையில்
நாளுமுயர் செங்கோல் நடத்தக் கொடுத்துவிடு,

நல்லாட்சி செய்கின்ற நல்லவர்க்குத் தென்பூட்டச்
சொல்லாட்சி செய்யுந் தொழிலோனே பாட்டெழுது,
செந்தமிழ்க்குத் தீங்குவரின் சீற்றமொடு பாட்டெழுது,
நொந்தவர்க்கு வாழ்வுதர நூறுவகைப் பாட்டெழுது,
மக்களுக்கு வேண்டும் மனவளத்தைப் பாடுகநீ,
தக்க மனவளத்தைத் தக்கவைக்கப் பாட்டெழுது,
சாண்வயிற்றுப் பாட்டுக்குத் தக்கபடி பாட்டெழுதி
மாண்பழித்துக் கொள்கைகளை மாற்றியிங்குப் பாடாதே,
புத்தம் புதுவுலகம் பூத்து மலர்ந்திடவும்
தத்தங் கடமைகளைத் தாழ்வின்றி ஆற்றிடவும்
ஏழைமை நீங்கிடவும் இன்னல் தவிர்ந்திடவும்
தோழமை எங்குந் தொடர்ந்துலகம் ஓங்கிடவும்
எங்கள் தமிழொன்றே ஈங்கரசு செய்திடவும்
பொங்கும் முரசொலிக்கப் பூரித்த தோளுயர்த்திப்
பாடடா ஏடெடுத்துப் பாரடா ஏறெடுத்து,
நாடடா ஈதுனது நாடடா பாடடா,
பாடும்போ துன்னைப் பகைப்பவர்தாம் யாரடா?
ஓடும்இனம் அல்லோம் உருத்தெழுந்தாற் போரடா!
போரெடுத்தால் எப்பகையும் போய்மடியும் ஈங்குன்னை
யார்தடுக்க வல்லார்? எழுந்திங்கு நின்கருத்தைப்
பாடடா பாடென்று' பாவை உரைத்ததனால்
ஏடெடுத்தேன் பாட்டெழுத இன்று.

முத்தமிழ் இலக்கிய மன்றம்
திருக்கழுக்குன்றம்
25.4.1967.

# புதியதொரு விதிசெய்வோம்

விழிசிவப்பா தணல்சிவப்பா என்று நம்மை
வியப்புறுத்தும் உலைக்களத்தில் பற்றும் செந்தீ
குழிவயிற்றின் பசிக்கனல்போல் எரிய அங்கே
கொல்லனவன் உலைத்துருத்தி ஊதுங் காற்று
தொழில்புரிவோன் பெருமூச்சுப் போல வீசத்,
தூக்கிவந்த வல்லிரும்பை நெகிழக் காய்ச்சி
எழிலுறவே சம்மட்டி கொண்டு தாக்கி
எண்ணியவா றுருவுபெற ஆக்கி வைத்தான்.

உடலுயிரைப் பொருளாகக் கருதா திந்த
உலகத்தை உருவாக்க முயன்ற தோள்கள்
கொடுமைகளை மிடிமைகளை வறுமை தந்த
கோணல்களை எத்தனைநாள் சுமக்கும்? மேலும்
அடிமையெனப் படிகளென ஆக்கி வைத்தால்
அத்தனையும் எத்தனைநாள் உளம்பொ றுக்கும்?
இடியெனவே முழங்காதோ அந்த வுள்ளம்?
என்றேனும் நிமிராவோ அந்தத் தோள்கள்?

வறுமையெனும் உலைக்களத்தில் அடுக்கி வைத்த
　　மதம்சாதி பட்டினிநோய் மூடம் என்ற
கரிகளிலே உணர்ச்சியினை மூட்ட, வீசும்
　　காற்றெனவே பெரும்புரட்சி தோன்ற, அங்கே
உரிமையெனும் போராட்டச் செந்தீ பற்றும்;
　　*உறிஞ்சிவரும் இரும்புகளை அதனிற் காய்ச்சிச்
சரிவுபடாப் பொதுவுடைமைச் சட்டம் என்ற
　　சம்மட்டி யாலடித்தால் உருவ மாகும்.

போராடும் உலகத்தைச் சாய்க்க வேண்டின்
　　புதியதோர் உலகத்தைப் படைத்தல் வேண்டும்;
நீரோடு நிலம்நெருப்பு வானம் காற்று
　　நிறைபொருள்கள் தனியுடைமை ஒருவர்க் கென்றால்
வேரோடு சாய்க்கின்ற துணிவு வேண்டும்;
　　விளையாட்டுப் பேச்சாலே பயனே இல்லை;
யாரோடும் பகைவேண்டாம்; ஒன்று பட்டால்
　　யாவுமிங்குப் பொதுவாகும் புதுமை பூக்கும்

*உறிஞ்சி வரும் இரும்புகள் - பிறருழைப்பை உறிஞ்சும் இரும்பு போலும் மனமுடையார்.

இருட்டுலகில் விடிவெள்ளி எழுதல் கண்டோம்
    இனியதொரு வைகறையும் வருதல் கண்டோம்
சுருட்டுபவர் எவரென்று தெரிந்து கொண்டோம்
    தூங்கிவந்த விழியிமைகள் திறந்து கொண்டோம்
உருத்துவரும் செங்கதிரோன் எழுந்து விட்டான்
    உலகமெலாம் தெளிவுபெற விளங்கிற் றிங்கே
பொருட்டுறையில் பிறதுறையில் சமமே கண்டு
    புனிதமுடன் அதைஎங்கள் உயிர்போற் காப்போம்.

14.3.1980

(ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு
மலரில் வெளிவந்தது)

# பகடைக் காய்

ஏட்டளவில் பாட்டெழுதிப் புகழ்ச்சி சொல்லி
ஏற்றமெலாம் எடுத்துரைத்து வியந்து கூறிக்
காட்டுகிறோம் உழவன்றன் பெருமை எல்லாம்;
கண்கட்டு வித்தையினால் கால மெல்லாம்
ஓட்டுகிறோம் கற்பனையில் உலவு கின்றோம்
உண்மையினைத் திரையிட்டு மூடு கின்றோம்;
வாட்டமுடன் அவன்வாழுங் குடிலுக் குள்ளே
வளர்துயரைத் துடைப்பதற்கு மறந்து விட்டோம்.

உழுகின்றான் விதைக்கின்றான் நீரைப் பாய்ச்சி
உழைக்கின்றான் காக்கின்றான் ஆனால் நாளும்
அழுகின்றான் உணவின்றி; பெற்ற மக்கள்
அலைகின்றார் என்புருவில்; பேசாத் தெய்வம்
தொழுகின்றோம் முப்பொழுதும்; பேசுந் தெய்வம்
துணியின்றி உணவின்றிக் கந்தல் கட்டிப்
பழுதுண்ட சிலைகளெனத் திரியக் கண்டோம்;
பாடுகின்றோம் அவன்பெருமை என்னே விந்தை!

உழுகின்ற காளைக்கு வைக்கோ லேனும்
ஒருசிறிது கிடைத்து விடும்; வாழ்நா ளெல்லாம்
உழுதொழிலில் கழிக்கின்றோன் கணக்குப் பார்த்தால்
உழக்கேனும் மிஞ்சாதென் றுலகஞ் சொல்லும்
பழமொழியைக் கேட்டதினிப் போதும் போதும்
பாரிலவன் வாழ்வினையும் பெருக்கல் வேண்டும்
முழுமையொடு வாழவழி வகுத்தல் வேண்டும்
முயலாது கழித்தலினி வேண்டா வேண்டா

கைகட்டி உலகந்தான் உழவன் பின்னே
கடுகிவரும் எனவுரைத்தோம் நன்று நன்று;
கைகட்டி வாய்பொத்தி உண்மை வாழ்வில்
கால்வளைத்து நிற்பவன்யார்? உழவன் அன்றோ?
பொய்கட்டி விடுவதெலாம் போதும் போதும்;
புலையனென அவன்வாழ்வைப் பொசுக்கு கின்றோம்;
மெய்தொட்டுப் பயிலஇனும் கூசு கின்றோம்
மேலென்றுங் கீழென்றும் பேசு கின்றோம்.

ஏர்தொட்டுத் தொடிப்புழுதி *கஃசாச் செய்தே
எருவிட்டு நீர்பாய்ச்சிக் காத்து நின்று
பார்கெட்டுப் போகாமல் உலகில் எங்கும்
பசிப்பிணியை ஓட்டுகிறான் அவன்க ழுத்தைக்
கூர்பட்ட கதிரரிவாள் கொண்டு வெட்டக்
கூசுகிலோம்; நெஞ்சுருகப் பார்த்த கண்கள்
நீர்சொட்ட அவன் வாழுங் குடிலை யெல்லாம்
நெருப்பூட்டி எழும்புகையில் உலவு கின்றோம்.

*கஃசு = கால்பலம்

அரசியலை அரங்காக்கிச் சூதும் வாதும்
ஆடுகின்ற பேர்வழிகள் உழவன் றன்னை
உரியஒரு காயாக்கி உருட்டு கின்றார்
உணராமல் அவ்வுழவன் உருளு கின்றான்
உருளுமவன் ஒருபயனுங் கண்ட தில்லை;
உருட்டுபவர் போரேறி மேய்தல் கண்டோம்;
அரசியலும் அவனுழைப்பை உறிஞ்சி வாழும்
அட்டையென மாறியது கெட்ட காலம்!

வீழ்கின்ற புனலனைத்தும் உரிமை யாக்கி
விலைகொடுத்துத் தனியுடைமை என்ப துண்டா?
சூழ்கின்ற காற்றதனைச் சுடுநெ ருப்பைச்
சொத்துடையார் தனியுடைமை ஆக்க லுண்டா?
பாழ்வெளியாம் வானத்தைப் பாரி லெங்கும்
பணங்கொடுத்துத் தனியுடைமை செய்த துண்டா?
வாழ்பூதம் அய்ந்தனுளும் நிலத்தை மட்டும்
வன்புடையார் தனியுடைமை செய்த தேனோ?

(செய்யாறு, 17.1.1969)

# ஏர்நின்றால்.....

நாடாள்வோர் செங்கோலும் உழவன் ஏந்தும்
    நலமிக்க கோலைத்தான் நோக்கி நிற்கும்;
வீடாளும் இல்லறத்து மாந்தர் தாமும்
    விளைவுசெயும் உழவனைத்தான் நோக்கி நிற்பர்;
கூடாது வாழ்க்கையென வெறுத்த காவிக்
    கோலத்தர் துறவுக்கும் அவனே காவல்;
ஓடாமல் ஏர்நின்றால் உலகம் நிற்கும்
    உலகளிக்கும் இறைவனுக்கும் பூசை நிற்கும்.

ஏர்நடக்கப் பார்நடக்கும்; இல்லை என்றால்
    எதுநடக்கும்? பசிநடக்கும் பிணிநடக்கும்
போர்நடக்கும் கொலைநடக்கும் பொய்நடக்கும்
    பொல்லாத அத்தனையும் நடக்கும் அன்றோ?
சீர்நடத்தும் பாவலன்றன் செய்யுள் எல்லாம்
    *செய்யுள்நடும் உழவனுக்குப் பின்பாட்டாகும்;
கூர்தொடுத்த ஏர்முனைக்குப் பின்னே சென்று
    கும்பிட்டுத் திரிந்தேதான் உலகம் வாழும்.

(செய்யாறு 17.1.1969)

---

* செய்யுள் — வயல்

# பொதுமை காண்போம்

## பதினான்கு சீர் விருத்தம்

வறுமை மிக்கு வலிமை கெட்டு
வறியர் வாடும் போதிலே
வலியர் மட்டும் வளமை யுற்று
வளர்வ தென்ன நீதியோ?
பொறுமை யற்றுப் புலிநிகர்த்துப்
பொதுமை காணும் போரிலே
புரட்சி தோன்றும் புதிய போக்கில்
புரளி என்ன நேருமோ?
இருமை போக ஒருமை காண
*இறைவன் சொற்ற பாட்டிலே
இடரி லாத வழிகள் காண
இறங்கி வாரும் நாட்டிலே
வறுமை போக வளமை சேர
வழிகள் யாவை? தேடுவோம்
வளரும் நாடு பொதுமை யாகி
வாழ்க என்று பாடுவோம்.

---

*இறைவன்= வள்ளுவன்

# பூக்கட்டும் புதுமை

நெறிபிறழா உழைப்பதனைப் பெருக்கி நின்றால்
　　நேரியநல் லுரிமைகளை வழங்கல் வேண்டும்;
உரிமைகளைப் பறித்தடக்க எண்ணு வீரேல்
　　உணர்ச்சிகளே பொங்கிஎழும் புரட்சி ஓங்கும்;
சரிபிழைகள் தெரியாத நிலைமை தோன்றும்;
　　சமர்வருமுன் பெருகட்டும் உரிமை யாவும்
சொரிமழைபோல் பொழியட்டும் உழைப்பை மாந்தர்;
　　சுடர்விட்டு மிளிரட்டும் நமது நாடு.

சிரிக்கட்டும் மக்களெலாம் மகிழ்வு கொள்வோம்;
　　சிரிப்பளவில் நில்லாமல் உழைப்பைக் கொஞ்சம்
பெருக்கட்டும்; பெருகியதாற் பெற்ற இன்பம்
　　பெருகட்டும் நிலைக்கட்டும்; சோம்ப லைத்தான்
முறிக்கட்டும்; முறிக்கியபின் உழைப்பு நாட்டில்
　　முளைக்கட்டும்; முளைவிடுமேல் வாழ்வும் ஓங்கும்;
இருக்கட்டும் நமக்கென்ன என்றி ருந்தால்
　　இனிக்கெட்டுப் போவதலால் வழியே இல்லை.

பூக்கின்ற மலர்களெல்லாம் பூக்கள் அல்ல
புதியனவாய் வருவவெலாம் புதுமை அல்ல
ஈர்க்கின்ற மணம்பரப்பும் மலர்க ளைத்தாம்
எல்லாரும் போற்றிடுவர்; நலம்ப ரப்பிக்
காக்கின்ற புதுமையைத்தான் ஏற்பர் சான்றோர்;
காகிதப்பூப் போல்விரியும் புதுமை எல்லாம்
போக்குதலே அறிவுடைமை; மயங்கி நின்று
புதுமையெனும் பெயராலே வீழ்தல் வேண்டா.

செங்கதிரால் தாமரைகள் சிரித்தி ருக்கும்
சேர்மதியால் அல்லிமலர் வாய்சி ரிக்கும்
பொங்கிவரும் மழைவரவால் பயிர்சி ரிக்கும்;
பொய்யாத மொழிக்குறளால் புலம்சி ரிக்கும்;
துங்கமுறச் சிரித்திருக்கும் அறிவால் ஆய்ந்து
தூயனவன் சொல்வழியில் பொதுமை காண
இங்கினிநாம் முயலுவமேல் புதுமை பூக்கும்
புல்லடிமை தேய்ந்துசம நிலையே வாய்க்கும்.

---

ஸ். தூயனவன் — வள்ளுவர்

பூக்கின்ற மலர்களெல்லாம் பூக்கள் அல்ல
புதியனவாய் வருவவெலாம் புதுமை அல்ல
ஈர்க்கின்ற மணம்பரப்பும் மலர்க ளைத்தாம்
எல்லாரும் போற்றிடுவர்; நலம்ப ரப்பிக்
காக்கின்ற புதுமையைத்தான் ஏற்பர் சான்றோர்;
காகிதப்பூப் போல்விரியும் புதுமை எல்லாம்
போக்குதலே அறிவுடைமை; மயங்கி நின்று
புதுமைஎனும் பெயராலே வீழ்தல் வேண்டா.

செங்கதிரால் தாமரைகள் சிரித்தி ருக்கும்
சேர்மதியால் அல்லிமலர் வாய்சி ரிக்கும்
பொங்கிவரும் மழைவரவால் பயிர்சி ரிக்கும்;
பொய்யாத மொழிக்குறளால் புலம்சி ரிக்கும்;
துங்கமுறச் சிரித்திருக்கும் அறிவால் ஆய்ந்து
தூயனவன் சொல்வழியில் பொதுமை காண
இங்கினிநாம் முயலுவமேல் புதுமை பூக்கும்
புல்லடிமை தேய்ந்துசம நிலையே வாய்க்கும்.

---

சி. தூயனவன் — வள்ளுவர்

# யாவும் பொதுமையடா

கோடி தொகுத்தபினும் மாடி எடுத்தபினும்
கூட வருவதொன் றில்லையடா
வாடி வதங்கிவிழும் ஏழை எளியவர்க்கு
வாழ்வு வழங்குவது நல்லதடா

வாழத் துடிப்பவனை நாளும் உழைப்பவனை
வாழ்வைச் சுரண்டுவது கொள்ளையடா
கோழை எலும்புகளும் கூர்மை யடைந்துவிடின்
*கோலைத் தடுப்பவரும் இல்லையடா

பாழும் வயிற்றுணவு பஞ்சின் உடுக்கையிவை
பாரிற் பிறந்தவர்க்குப் பொதுமையடா
ஏழைக் கிவையிரண்டும் இல்லை விதிப்பயனாம்
என்று மழுப்புவது மடமையடா

தேவை யளவறிந்து யாவும் அடைந்தபினும்
தேடி முடக்குவது குற்றமடா
யாவும் பொதுமையென நீயும் உணர்ந்துநட
யாரும் நமதருமைச் சுற்றமடா

*(கோல்- அம்பு)

# உலகை மாற்றுவோம்

உலகம் இங்குப் போகும் போக்கை
ஒன்று சேர்ந்து மாற்றுவோம்
ஒருவ னுக்கே உரிமை யென்றால்
உயர்த்திக் கையைக் காட்டுவோம்
கலகம் இல்லை குழப்பம் இல்லை
கடமை யாவும் போற்றுவோம்
கயமை வீழ உரிமை வாழக்
கருதி யுணர்வை ஏற்றுவோம்

உழைத்து ழைத்து விளைத்த நெல்லை
ஊருக் கெல்லாங் கொடுக்கிறோம்
உழைத்து விட்டுக் களைத்த பின்னர்
உணவில் லாமற் படுக்கிறோம்
களைத்துப் போன கார ணத்தைக்
கருதிக் கொஞ்சம் நோக்குவோம்
கடவுள் ஆணை என்று சொன்னால்
கண்ணில் நெருப்பைக் காட்டுவோம்

நமக்குள் நாமே வேறு பட்டு
நாலு பக்கம் போகிறோம்
நாதி யற்றுக் குனிந்து நெஞ்சம்
நலிந்து நாளும் சாகிறோம்
நமக்குள் வேறு பாடு காணல்
இல்லை யென்றே சொல்லுவோம்
நமது கூட்டம் நிமிர்ந்து சொன்னால்
நாளை உலகை வெல்லுவோம்.
உலகம் போகும்போக்கை யிங்கு மாற்றுவோம்
உடைமை யாவும் பொதுமையென்று சாற்றுவோம்.

14.3.1982.

# துன்பத் துடிப்பு

விரல்துடித்தால் யாழ்நரம்பில் இசையைக் கூட்டும்;
விறலியரின் கால்துடித்தால் நடனங் காட்டும்;
திறல்படைத்த சிற்பியின்கை உளிது டித்தால்
தேவரையுங் கல்லுக்குள் அடக்கிக் காட்டும்;
அருள்பழுத்த கலைஞன்றன் மனந்து டித்தால்
அரியகலை பலகாட்டும்; சிந்தித் தாயும்
திறல்படைத்த சிந்தனையார் மனந்து டித்தால்
சீர்மைமிகும் புத்துலகைப் படைத்துக் காட்டும்.

கற்பனையில் உலவுகவி மனத்து டிப்பால்
கனவுலகம் உருவாகும்; இல்ல றத்தைக்
கற்கவரும் காதலர்கள் மனத்து டிப்பால்
கருவுலகம் உருவாகும்; பள்ளி சென்று
கற்பவரின் அளவில்லர் மனத்து டிப்பால்
கலகங்கள் உருவாகும்; ஒழுக்கக் குன்றில்
நிற்பவர்தம் மனத்துடிப்பால் நலங்கள் எல்லாம்
நிலமெங்கும் உருவர்கும் தீமை தேயும்.

துன்பத்தில் நெஞ்சங்கள் துடிப்ப துண்டு
    தொடர்கின்ற இன்பத்தும் துடிப்ப துண்டு
துன்பத்தின் துடிப்பாலே புரட்சி தோன்றும்;
    துடிக்கின்ற இன்பத்தில் மருட்சி தோன்றும்;
துன்புற்று மக்களினம் துடித்தால் எங்கும்
    துவள்கின்ற நெஞ்சத்தில் நெருப்பு மூளும்
மின்பற்றி விளையாடும் வாளும் வேலும்
    மிடைந்திருக்கும் ஆட்சிகளும் எரிந்து வீழும்.

தன்மனையின் காற்சிலம்பை விற்க வந்த
    தப்பறியாக் கோவலனைக் கள்வன் என்றான்;
பொன்செய்யும் கொல்லனுரை நம்பி நின்றான்;
    புகழ்க்கருணை மறவனுக்குத் தீங்கு செய்தான்;
பொன்செய்யும் வேலுடையான் பாண்டி மன்னன்
    புகார்விட்டு வந்தான்மேல் புகாரு ரைத்தான்
என்னுமொழி செவிப்படலும் கண்ண கித்தாய்
    இடர்ப்பட்டாள் கொதித்தெழுந்தாள் கனலாய் நின்றாள்.

'குறையில்லாக் கோவலனோ கள்வன்? என்றன்
    கொழுநனுக்கோ வீண்பழிகள்? சொல்வார் பேச்சைச்
சரியென்று நம்புவதோ அரச நீதி
    சமன்செய்யும் கோல்போல நடுநின் றோராக்
குறைமதியன் நாடாளும் மன்ன னோ?இக்
    கொடுமைக்கே சாவுமணி அடிப்பேன்' என்றே
எரிகின்ற நெஞ்சத்தே துடிது டித்தாள்
    இருந்தஇடந் தெரியாமல் சாய்ந்த தாட்சி.

(13.5.1978)

## தீ பரவட்டும்

வயலிருந்தும் வயல்பாய நீரி ருந்தும்
 வருந்தாமல் நீர்பாய்ச்சி உழைக்கும் நல்ல
செயலிருந்தும் அச்செயலால் விளைவி ருந்தும்
 சேர்த்துவைத்த நெல்முதலாப் பொருளி ருந்தும்
மயலுறவும் செயலறவும் மாந்தர் வாடி
 வாயுணவுக் கின்னலுறச் செயற்கைப் பஞ்சம்
புயலெனவே புகுந்ததனால் அவர்வ யிற்றிற்
 பொங்கியெழுந் தெரிந்ததுவே பசித்தீ பற்றி.

வெள்ளையனும் நமக்குரிமை தந்து விட்டு
 வெளிப்போந்தான் ஆதலினால் ஆங்கி லத்தால்
எள்ளளவும் செந்தமிழ்க்குத் தீத்மை யில்லை
 இனியதமிழ் அரியணையில் அமரும் என்றே
உள்ளமதிற் பொங்கிஎழும் ஆர்வங் கொண்டோம்;
 ஒற்றுமையாம் பொதுமொழியாம் என்று கூறிப்
பிள்ளைமதி படைத்தவரோ இந்தி ஒன்றே
 பேணுகிறார் எரிமலைபோல் வெடித்த துள்ளம்

உரிமைநமக் கெய்தியதால் இனிமேல் வாழ்க்கை
　　உயர்ந்துவிடும் வளம்பெருகும் கவலை யில்லை
சரிநிகராய் வாழ்ந்திடுவோம் உயர்வு தாழ்வு
　　சாதியிலும் பொருள்தனிலும் எதிலும் இல்லை
அரசியலும் நடுநின்று பொதுமை பேணும்
　　அடிமைமிடி இலையென்றே கனவு கண்டார்;
புரியகிலாப் பகற்கனவாய்ப் போன தாலே
　　பொங்கியவர் விழிகளெலாம் செந்தீ செந்தீ.

சோறுபெறாக் காரணத்தால் வயிறு பற்றிச்
　　சுடர்த்தெழுந்த பசித்தீயும் ஆள வந்தார்
ஊறுபெறச் செந்தமிழை அழிக்க வேண்டி
　　உன்னுவதால் உருத்தெழுந்த உள்ளத்தீயும்
மாறுபடும் ஆட்சியினால் அல்ல லுற்ற
　　வறியவர்தம் விழித்தீயும் கொடுங்கோல் தன்னை
நீறுபடச் செய்யட்டும் செங்கோ லாட்சி
　　நிலவட்டும் பரவட்டும் அந்த முத்தீ.

# திரும்பிப் பார்

காலங்கள் மாறிடலாம்; ஒரு நாள் கண்ட
கருத்துகளும் மாறிடலாம்; பூண்டு கொண்ட
கோலங்கள் மாறிடலாம்; சட்டம் கூறும்
கொள்கைகளும் மாறிடலாம்; வாழும் இந்த
ஞாலங்கள் மாறிடலாம்; வாழ்ந்து வந்த
நாகரிகம் மாறிடலாம். மானம் மற்றும்
சீலங்கள் மாறிடுமேல் சீசீ என்ற
சிறுமைக்கே ஆட்படுவாய் சீரி ழந்தே.

ஆடைகளை மாற்றுகிறாய்; முடியைக் கூட
அருவருக்க மாற்றுகிறாய்; பேசுகின்ற
மேடைகளை மாற்றுகிறாய்; வீரங் காட்டும்
மீசையினை மாற்றுகிறாய்; தொலைந்து போபோ
கோடையினைக் குளிர்ச்சிதரும் பருவ மென்று
குலவுகின்ற தமிழ்மகனே உன்னி னந்தான்
வாடுவதை மாற்றுகிற உணர்வே யின்றி
மயக்கத்திற் சிக்குண்டு திரிகின் றாயே.

ஊறிவருங் குருதியினைக் கெடுத்துக் கொண்டாய்
உன்னினத்தின் மானத்தை ஒதுக்கி விட்டாய்
சீறிவரும் அரியேற்றின் குலத்தில் வந்த
சிறப்பினையும் மறந்துவிட்டாய்; தன்ன லத்தால்
மீறிவரும் ஆவலினால் கவர்ச்சிக் கானாய்
மீளாத பழிசுமந்தாய்; முகிலிற் காணும்
தேருருவம் பயன்படுமா போர்க்க ளத்தில்?
தெளியாத தமிழ்மகனே தெளிந்து நிற்பாய்.

பசுதந்த சுவைப்பாலைக் கொம்புத் தேனைப்
பலாதந்த நறுஞ்சுளையைக் கருப்பஞ் சாற்றை
நசைமிகுந்த மாங்கனியை வாழை தந்த
நற்கனியைப் பாழ்நிலத்திற் கொட்டி விட்டுப்
பசிவந்து திரிகின்ற பேதை யுண்டா?
பயன்மிகுந்த இளமையினைப் பாழ்ப டுத்தி,
வசைமிகுந்து, நல்லுணர்வைச் சிதற விட்டு,
வழிதவறிச் செல்லுவதா அறிவின் பாங்கு?

திரும்பிப்பார் உன்னினத்தைப் புகழ்க்குன் றின்மேல்
தெரிவதைப்பார் அதன்பெருமை; பின்னர் இன்று
விரும்பிப்பார் அவ்வினத்தை; வீழ்ந்து விட்ட
விளைவைப்பார்; தாழ்ந்துகெட்ட நிலைமை யைப்பார்;
துரும்பைப்பார் அதைப்போலத் தேய்ந்த தைப்பார்;
தோன்றும்பார் உன்னுளத்தில் ஒரு ணர்ச்சி;
இரும்பைப்பார் அதன்பின்னர்த் தோள்க ளைப்பார்;
எழுச்சியினால் மலரும்பார் இந்தப் பாரே.

(24.11.1980)

# அந்நாள் எந்நாள்?

வியப்புமிகுங் கலைத்திறமை கொண்டி லங்கும்
வியன்கோவில் எடுப்பித்தான் இராச ராசன்;
நயத்தக்கான் திருவுருவைச் சிலையில் ஆக்கி
நனிவிருப்பால் அச்சிலையைக் கோவி லுக்குள்
அயற்புறத்தே கவரெடுத்து வைக்க எண்ணி
அருமுயற்சி மேற்கொண்டார் முடிய வில்லை;
மயக்கநிலை தெளியவில்லை; அடிமை இன்னும்
மாறவில்லை உரிமைபெறும் அந்நாள் எந்நாள்?

பொன்னிவளக் கரையுடையான் தஞ்சைப் பேரூர்
பொலிவுபெறப் பெருங்கோவில் ஒன்ற மைத்தான்;
அன்னதிருக் கோவில்நலம் புரந்து காக்கும்
ஆளுரிமை கங்கைக்கே உரிய தென்றால்
என்னமுறை யீதென்று துணிந்து கேட்க,
என்துடைமை எமக்கென்றே உரிமை கோர
இன்னுமுணர் வெழவில்லை தமிழர்க் கந்தோ!
எப்பொழுது விழிப்பாரோ? அந்நாள் எந்நாள்?

அழல்வடிவக் கடவுளுக்குக் கோவில் ஆக்கி,
அவன்செவியில் தேவார ஒலியைக் கூட்டி
நிழல்படியாக் கோபுரமும் கட்டி வைத்து,
நெடுந்தெருவில் நிற்கின்றான் இராச ராசன்;
நிழல்கொடுக்கும் வெண்குடைக்கீழ் உலகம் ஆண்டான்;
நிற்கின்றான் குடையின்றித் தஞ்சை மண்ணில்;
அழிதருமிச் செயல்தீரத் தமிழர் இங்கே
ஆர்த்தெழும்நாள் எந்நாளோ? அந்நாள் எந்நாள்?

நன்றுபடாச் சமயங்கள், பிரிவு கொண்ட
நாலுவகை வருணங்கள், அவற்றுட் சாதி
என்றுபல ஆயிரங்கள், பகைமை கொண்டே
இயங்கிவரும் பலகட்சி இவற்றுட் சிக்கி
ஒன்றுபடாத் தமிழ்நாடே நீதான் இங்கே
உருப்படுமோர் நாள்வருமா? அந்நாள் எந்நாள்?
தொன்றுமுதிர் தமிழினமே அடிமை தீரத்
துணிந்தொன்றாய்க் கூடாயோ? அந்நாள் எந்நாள்?

# சிறுத்தையே விழித்தெழு

தனித்தனிப் பிறந்த தமிழர்தம் நெஞ்சம்
இனித்திடும் வகையால் எழிற்றமிழ் மொழியால்
தம்பீ தம்பீ என்றொரு தாயின்
கும்பியின் பிறப்பெனக் கூறிய குரலெது?
நம்பி வந்தவர் நலம்பெற் றுயர்ந்திடத்
தெம்புகள் தந்து தேற்றிய குரலெது?
என்றன் உடன்பிறப் பென்றுனை விளித்து
நன்றுரை புகலும் நம்பிக்கைக் குரலெது?
பொய்யா உறவால் போற்றிப் போற்றி
அய்யா அண்ணாவென் றழைத்திடும் குரலெது?
பழகிய உனக்குப் பகரவும் வேண்டுமோ?
கழகக் குரலெனக் கண்டனை நீயே!
உன்றன் மூச்சால் ஓயா உழைப்பால்
நின்றமர் பலப்பல நிகழ்த்திய நெறியால்
வழிந்தகண் ணீரால் பொழிந்தசெங் குருதியால்
எழுந்தது வளர்ந்ததிவ் வெழில்பெறு கழகம்;
நடிப்பால் வளர்ந்ததா கழகம்? கொள்கைப்
பிடிப்பால் அன்றோ குன்றென உயர்ந்தது;
குன்றினைச் சிதைத்திடும் குறியொடு குருவிகள்
கன்றுகள் பகலிற் கனவுகாண் கின்றன;

அறப்போர் எத்தனை ஆற்றினை! இதனை
மறப்பார் உளரோ? மறுப்பார் உளரோ?
உளத்தெழும் உணர்வால் ஒவ்வொரு போரிலும்
களப்பலி யாகக் காளையர் உயிர்கள்
எத்தனை எத்தனை ஈந்தனர் உவந்தே;
அத்தனை உயிரும் எவர்தம் உயிராம்?
உன்னுடன் பிறந்தார் உன்னலம் நினைந்தார்
தம்முயிர் அன்றோ? தமிழ்நலங் காக்க
எரியிடைப் புகுந்துடல் கருகிட மடிந்தனர்
அரிநிகர் தோழர் அவரெலாம் உன்னினம்!
கொடுஞ்சிறைக் கோட்டம் இடஞ்சிறி தாகப்
புகுந்தது நிறைந்தது புலிநிகர் கூட்டம்!
முந்திய போர்களிற் சிந்திய குருதிகள்
சிந்தைக் கல்லிற் செதுக்கிய வரிகள்
வரலாற் றேட்டில் வாழ்வன காணுதி
அரியேற் றுள்ளம் அவற்றால் வாய்த்திடும்
அழியா வரிகளை அடிக்கடி படித்திடு
விழிபோல் அவற்றை விரும்பிப் போற்றிடு!
பழகிய தமிழ்மொழி பழுதுறா தோங்கிட
இளகிய தமிழினம் இணையிலா திலங்கிடக்
கழகம் ஒன்றே காத்திட வல்லது;
கழகம் காத்திடல் காளையே நின்கடன்;
பாசறை அமைத்ததில் பயின்றிடு போர்முறை

நீசரை எதிர்த்திட நிமிர்த்திடு தோள்கள்;
சென்ற களமெலாம் வென்றது நின்னினம்
இன்றதை மறந்தனை இனியதை நினைந்தெழு!
நின்பாற் சோர்வு நேர்ந்துள தறிவேன்;
அன்பநின் சோர்வுக் கடிப்படை தெரிவேன்;
அதனாற் சோர்வுறல் அழகோ? உன்பணி
எதனால் மறந்தனை? எவர்க்கது தீமை?
நடந்ததை மறந்திடு நடப்பதை நினைந்தெழு
தொடர்ந்துன் பணியைத் தொடங்கிடு நடந்திடு
சிந்தது செய்நீ செங்கதிர் வழியில்
வந்தனை நீயோ வாடிக் கிடப்பது?
பெரியார் அறிஞர் பேணிய பாசறை
உரியாய் நீயோ உறங்கிக் கிடப்பது?
முறைப்படி ஆண்டநின் முத்தமிழ் நாட்டைச்
சிறைப்பட விடாமல் சிறுத்தையே விழித்தெழு!
வரிப்புலிப் போந்தே வரிந்து கட்டிநில்!
நரிச்செயல் குறுக்கிடின் மிதித்ததை நசுக்கிடு!
நாட்டில் தமிழ்மகன் நல்லதோர் ஆட்சியை
நாட்டிடத் துணைநில்! நாளெல்லாம்
மங்கலப் பொங்கலில் வஞ்சினம் பூண்டெழு!
சிங்க மகனே சினந்தெழு வுடனே!

(24.12.74)

# தமிழின வரலாறு

கல்லெடுத்து முள்ளெடுத்துக் காட்டுப் பெருவெளியை
மல்லெடுத்த திண்டோள் மறத்தால் வளப்படுத்தி
ஊராக்கி ஓங்கும் நகராக்கி நாடென்ற
பேராக்கி வாழ்ந்த பெருமை அவன்பெற்றான்;
மாநிலத்தில் முல்லை மருதம் குறிஞ்சி நெய்தல்
நானிலத்தைக் கண்டபெரும் நாகரிக மாந்தனவன்;
கோட்டைச் சுவரெடுத்துக் கூடும் படையமைத்து
நாட்டைப் புரந்து நலந்தந்தான்; நாளும்
குடிபழி தூற்றாது கோலோச்சி நல்ல
படியரசு செய்து பயன்தந்து பேர்கொண்டான்;
மாந்தர் உயிரானால் வேந்தர் உடலாவான்
வேந்தன் உயிரானால் மாந்தர் உடலாவார்;
ஆழக் கடல்கடந்தான் அஞ்சும் சமர்கடந்தான்
சூழும் பனிமலையைச் சுற்றிக் கொடிபொறித்தான்
முக்குளித்தான் ஆழிக்குள் முத்தெடுத்தான் தோணிக்குள்
எக்களிப்பு மீதூர ஏலம் மிளகுமுதற்
பண்டங்கள் ஏற்றிப் பயன்நல்கும் வாணிகத்தால்
கண்டங்கள் சுற்றிக் கலமேறி வந்தவன்தான்;
காட்டைத் திருத்திக் கழனி எனவாக்கி
மேட்டைச் சமமாக்கி வேளாண் தொழில் புரிந்தான்;

பாராளும் காவலர்க்கும் பாட்டாளும் பாவலர்க்கும்
ஏராளும் காராளன் செய்யுதவி ஏராளம்;
சாவா மருந்தெனினும் தன்பால் இயைந்துவிடின்
ஆ ஆ இனிதென் றவனே தனித்துண்ணான்
மற்றோர் வெறுத்தாலும் மாறி அவரிடத்துச்
சற்றும் முனிபுகொளான் தாவி அணைத்திருப்பான்;
நெஞ்சில் உரமும் நெடுந்தோளில் வல்லமையும்
விஞ்சும் இயல்புடையான் துஞ்சுதலைத் தான்விழையான்;
அஞ்சாமை மிக்கவன்தான் ஆனாலும் சான்றோர்கள்
அஞ்சுவதை அஞ்சி அகற்றி விலக்கிடுவான்;
தக்கும் புகழென்றால் தாவி அதுபெறவே
பொக்கை உயிர்போக்கில் பொன்றாது நின்றிருப்பான்
சூழும் பழியென்றால் தூவென் றுமிழ்ந்தொதுக்கி
ஆழி உலகம் அதுபெறினும் தான்வேண்டான்;
தன்னலம் ஒன்றைத் தவிர்த்திடுவான் மற்றவர்
தந்நலம் வேண்டித் தனிமுயற்சி மேற்கொள்வான்
யாதுமென் ஊரென்பான் யாவரும் கேளிரென்பான்
தீதறியான் சூதறியான் சாதலும் கண்டஞ்சான்
தன்னிற் பெரியோரைத் தான்வியந்து நின்றாலும்
தன்னிற் சிறியோரைச் சற்றும் இகழ்ந்தறியான்;
வாழ்வில் வருமானம் வாய்ப்பின் அதுவேண்டான்
*சாவில் வருமானம் ஒன்றே சரியென்பான்;
ஒன்றே குலமென்றான் தேவன் ஒருவனென்றான்
நன்றே இறையுணர்வை நாட்டிற் குணர்த்திவந்தான்

*சாவில்வருமானம்-இறந்தால் மானம் வரும்.

வாழ்ந்த தமிழினத்தின் வாய்த்த வரலாறு
சூழ்ந்து சொலக்கருதின் சொல்லில் அடங்காது;
நாகரிகத் தொட்டில் நமது திருநாடு
வாகுடனே வாழ்ந்த வரலா றிதுவாகும்;
வாழ்ந்த வரலாற்றில் வந்த சிலசொன்னேன்
வீழ்ந்த வரலாறு விண்டால் மனம்நோகும்;
முச்சங்கம் கண்டு மொழிவளர்த்தோன் எப்பகையின்
அச்சங்க ளின்றி அமைதியில் நூல்படைத்தோன்
ஆங்கிலத்தால் ஆரியத்தால் ஆதிக்க இந்தியினால்
தீங்குவரு மோவென்று திண்டாடி நிற்கின்றான்
பண்படுத்தும் நூல்கள் பலதந்தோன் சான்றோரைப்
புண்படுத்தி மன்பதையின் பண்பழிக்கும் ஏடுகளே
இன்றுகுவிக் கின்றான்; இளையோர் உணர்வுகளைக்
கொன்று கெடுத்துவிட்டுக் கூசாமல் பேசுகின்றான்;
காசுக்கும் மாசுக்கும் கண்ட படிஎழுதும்;
ஆசைக்குட் பட்டே அலைகின்றான் பாவிமகன்;
நல்ல அரசியலில் நஞ்சைக் கலந்துவிட்டான்;
சொல்லும் மொழியெல்லாம் சூதன்றி வேறில்லை;
சூதாட் டரசியலில் சொக்கித் திரிபவரைச்
சூதாட்டக் காயாக்கிச் சொக்கட்டான் ஆடுகிறான்;
பண்பாட் டரசியலைப் பாழடித்துச் சாகடித்துத்
தன்பாட்டில் மட்டும் தனியார்வம் காட்டுகிறான்;
கண்டுமுதல் காணும் களமாக்கி அச்செயலைத்
தொண்டென்றும் சொல்லித் தொலைக்கின்றான் மக்களிடம்;
நோக்குந் துறைதோறும் நோய்செய்யும் போலிகளே
தூக்கித் தலைநிமிர்த்தித் தோளுயர்த்திச் செல்கின்றார்.

ஏட்டில் படித்தேன் இலக்கணப் போலியென
நாட்டிலும் போலிகள் நன்கு பெருகிவிட்டார்;
மானம் மறந்தான் மனத்தைத் துறந்துவிட்டான்
போனது போகப் பொருள்வந்தாற் போதுமென்றான்;
ஒட்டும் வயிற்றில் உடுத்த உடையில்லை
கட்டும் தறியில்தான் காலமெல் லாங்கிடப்பான்;
சிக்கல் எடுப்பான் சீர்செய்வான் பாநூலைச்
சிக்கலுக்குள் சிக்கி இவன்மட்டும் சீரழிவான்;
பாவறுந்த நூலைப் பதப்படுத்தி ஒட்டிவைப்பான்
வாழ்வறுந்து போனால் வழியின்றித் தான்தவிப்பான்
நூற்றுக் கணக்கிலவன் நூற்றுக் கொடுத்தாலும்
சோற்றுப் பருக்கைக்கு நோற்றுக் கிடப்பான்;
நாட்டுப் பசிபோக்க நாற்றை நடுகின்றான்
வீட்டுப் பசிநீக்க வேளாளர் சாகின்றான்; ளான் /
பல்லுயிரும் வாழப் பகுத்துண்டான் முன்னாளில்
பல்லுயிரும் வாடப் பறித்துண்பான் இந்நாளில்;
கூம்பிக் கிடக்கும் குடும்ப நிலைகண்டும்
சோம்பிக் கிடந்தே சுகங்கண்டு வாழ்கின்றான்;
பாவம் பழியென்று பாரான் தனதுமனம்
தாவும் செயலொன்றே தக்க தெனப்புரிவான்;
சின்ன நலமொன்றுசேரும் எனத்தெரிந்தால்
என்ன பெரும்பழியும் ஏற்கத் தயக்கமிலான்;
எல்லாம் பொதுவென்பான் என்பொருள்கள் மற்றவர்க்கு
தி| அல்ல தனியென்பான் ஆராத பேராசை!
வல்லான் சுரண்டி வளர்வதன்றி மற்றொன்றும்
கல்லான் கருதான் களத்தில் நடிக்கின்றான்.

வால்பிடித்துக் கால்பிடித்து வாழ்வு நடத்துதற்கு
வேல்பிடித்த மைந்தன் விரைவாக முந்துகின்றான்;
தன்னிலையிற் றாழ்ந்தும் தனதுயிரைக் காப்பதற்குப்
பின்னடைய வில்லை பெரும்பேதை ஆகிவிட்டான்;
பண்பாடு மூலையிற்போய் பாயை விரித்துவைத்துக்
கண்பாடு கொள்கின்ற காலம் இதுவன்றோ?
எங்கே உனதுமறை? எங்கே உனது நெறி?
எங்கே உனறைவன்? என்றால் விழிக்கின்றான்;
இங்கே புகுந்தமறை இங்கே புகுந்தநெறி
இங்கே புகுந்த இறை என்பனவற்றைக் காட்டுகிறான்
அந்தோ தமிழினத்தான் தன்னை யறியாது
நொந்தே கிடக்கின்றான் நோயிற் படுக்கின்றான்;
சொந்தமெது வந்ததெது சொல்ல வகையறியான்
வெந்ததைத் தின்று வெறுமனே சாகின்றான்;
விண்முட்ட வாழ்ந்து வியந்த வரலாறு
மண்முட்டச் சாய்ந்து மடிவதோ? பீடுடுத்து
வாழ்ந்த வரலாறு வீழ்ந்து மறைவதோ?
தாழ்ந்து கெடுதல் தகுமோ?எனவெழுந்து
பண்டை வரலாற்றைப் பாரில் நிலைநிறுத்தி
மண்டும் புகழ்சேர்க்க வந்தோர் சிலராவர்;
தாளாண்மை கொண்டு தளராது பாடுபட்ட
வேளாண்மை நெஞ்சர் விதைத்த உணர்வுகளை
நெஞ்சமெனும் நன்செய்யில் நேர்த்தி பெறவிளைத்து
விஞ்சுபயன் கொள்க விழைந்து.

(பாரி விழா, பறம்பு மலை)
(27.4.1980)

# இன்றைய நாடு

அயில்வேலும் உடைவாளும் உண்டான நாடு-இன்று-
அயலார்கள் அரசாளச் சரிபோடும் நாடு
-அயில்

வயல்யாவும் கயல்பாயும் புனல்சூழும் நாடு
வயிறார உணவார இயலாத நாடு
மயிலாடும் குயில்பாடும் வளமான நாடு
மனம்நோகத் தெருவோரம் குடிவாழும் நாடு
-அயில்

தலையான நெறிகண்டு புகழோடு நின்றோர்
தன்மானங் கெடும்போதும் உணராத நாடு
தலைநாளில் மொழிமூன்று வகையாகி நின்றும்
தமிழாலே இசைபாடத் தெரியாத நாடு
-அயில்

கதையாகக் கனவாக எதையேனும் சொல்வார்
காணாத உலகான வழியோதிச் செல்வார்
பொதுவாகும் பொருள்யாவும் எனுமாறு நாடிப்
புதுவாழ்வு நனவாக முயலாத நாடு
-அயில்

அரங்கேறும் மொழியாளர் பொழிவார்கள் சொல்லை
ஆனாலும் அவர்வாழ்வில் தொடர்பேதும் இல்லை
நிறமாறும் பச்சோந்தி மரபாளர் சொல்லில்
நினைகின்ற பயனேதும் விளைவாவ தில்லை
-அயில்

அயலாரும் துணிவோடு சதிராடு கின்றார்
அறிவாளர் திறம்யாவும் விழலாக நின்றார்
மயலோட மதிவாழ ஒருநாளும் எண்ணார்
வழியேதும் தெரியாத விழியாத கண்ணார்
-அயில்

புயலாகப் பகைசூழும் பொழுதாதல் கண்டும்
புழுவாக இனம்வீழும் நிலையாவுங் கண்டும்
செயல்காணத் துணிவேதும் உருவான துண்டா?
சிறிதேனும் உணராமல் சிலையாக நின்றார்
-அயில்

பெரியாரும் அறிவாளர் பலபேரும் வந்து
பெரும்பாடு பட்டாலும் உருவான தென்ன?
அறியாமை இருள்மூழ்கித் தடுமாறு கின்றார்
அணுவேனும் நகராமல் மரமாகி நின்றார்
-அயில்

(24.6.1979)

# ஆரியப் பேரரசு

அணிந்திருக்கும் பூணூல்கள் நூல்க ளல்ல
    ஆரியத்துப் பேரரசின் எல்லைக் கோடு;
தணிந்துரைக்கும் அவர்மொழிகள் அணுவின் குண்டு;
    தருப்பைப்புல் ஏவுகணை; நெற்றி யின்மேல்
அணிந்திருக்குந் திருநீறோ இடுக்கித் தாக்கும்
    ஆயுதங்கள் ;திருநாமம் கழும ரங்கள்;
நினைந்தெடுத்து விழிப்பாகக் கட்டி வைத்த
    நெடியமதிற் கோட்டைகளாம் நான்கு வேதம்

ஆலயங்கள் அவ்வரசு செங்கோ லோச்சும்
    அரண்மனையாம்; சிலைகள்வெளி நாட்டுத் தூதர்;
நாலுவகை வருணங்கள் பகைமு டிக்கும்
    நாற்படையாம்; பஞ்சாங்கம் சட்ட நூலாம்;
மேலுலகம் புராணங்கள் சாத்தி ரங்கள்
    மேற்படியார் விளம்பரஞ்செய் துறைக ளாகும்;
மாலுடைய மதம்நடன மங்கை யாகும்;
    மற்றுமுச்சிக் குடுமியொரு கொடியே யாகும்.

ஆலமரம் அரசமரம் இவற்றின் கீழே
அமர்சிலைகள் சிற்றரசாம்; உடைக்குந் தேங்காய்
பாலொடுநெய் ஊர்மக்கள் கப்ப மாகும்;
பறையோசை மந்திரங்கள் அரசின் ஆணை;
மேலுலகம் கீழுலகம் சிறைகளாகும்;
மேதைகள்போல் எழுதிவருஞ் செய்தித் தாள்கள்
வேலொடுவாட் படைகளாகும்; காஞ்சிப் பீடம்
வெற்றிபெற மறைசூழும் மன்ற மாகும்.

பகுத்துணரும் ஆற்றலிலார் மயக்கங் கொண்ட
பத்தியினால் தம்மைத்தாம் அறிய கில்லார்
தொகுத்திருக்கும் மடமைக்குள் மூழ்கி நிற்பார்
தொழும்பரிவர் குடிமக்கள் ; மனுநூ லாளர்
வகுத்திருக்கும் பிறப்பிறப்பு வரிக ளோடு
மன்றல்வரி குடிமக்கள் செலுத்தி நிற்பர்;
பகைத்தெவரும் எழுவரெனில் அழகு மிக்க
பராசக்தி ஏவிடுவர் பகையும் வீழும்.

வஞ்சனையின் வலைவிரிக்கும்;அறிவு தேய்ந்த
வாயில்லா அரிகளெல்லாம் வந்து வீழும்;
நஞ்சனைய தந்திரத்தால் மயக்கு கின்ற
நாத்திறத்தால் ஏமாற்றி ஆட்சி செய்யும்
பஞ்சணைந்த அரியணையில் ஏறி நின்று
பாமரரைப் பொம்மையென ஆட்டி வைக்கும்;
துஞ்சுமன மூடரிங்கு வாழும் மட்டும்
தோற்காது வெற்றிபெறும்ஆரி யந்தான்.

(30.3.1984)

# தமிழக அரசு

முடியரசர் தமக்குரிய அரசைப் பற்றி
முத்தமிழ்ப்பா வாணரெல்லாம் புகழ்ந்து பாடக்
கடிநகருள் அரியணையில் வீற்றி ருந்து
கற்பனையில் திளைத்திருந்த என்னை யிங்குக்
குடியரசைத் தமிழரசைப் பாடு கென்று
கூறிவிட்டார்; குறைநிறையைத் துணிந்து சொல்ல
முடியரசன் தகுவனென நினைந்தார் போலும்;
முயல்கிறேன் குறைகாணின் அதுவும் சொல்வேன்

பண்டையநல் லரசுக்குக் கொடிகள் மூன்று
பைந்தமிழ்நாட் டரசுக்குக் குறிகள் மூன்று
தொண்டுபுரி செயல்மேவும் 'கடமை' ஒன்று
தூய்மை மிகு "கண்ணியமாம்" தன்மை ஒன்று
கண்டபடி சிதறாமல் தலைவன் சொல்லைக்
காக்கின்ற "கட்டுப்பா டென்னும் ஒன்று
தண்டமிழ அரசுக்கு வழிவ குத்த
*தலைவன்றன் பெயருக்கும் மூன்றெ ழுத்து.

---

*தலைவன்- பேரறிஞர் அண்ணா

ஒரு மொழியால் உலகாண்டார் பண்டை வேந்தர்
உறவாடி வருமொழிக்கும் இடம ளித்தார்;
இருமொழியால் உலகாளச் சட்டம் செய்த
தென்னரசு தமிழரசு; நமது நாட்டின்
கருவிழியாய் உயிர்மொழியாய்த் துறைகள் தோறும்
காணுமொழி தமிழொன்றாம்; மற்றும் ஒன்று
வருமொழிதான் துணைமொழிதான்; தமிழைத் தாழ்த்த
வருமொழிக்கிங் கொருநாளும் இடமே யில்லை.

காருந்தும் பனிமலையை வெற்றி கொண்டு
கயல்புலிவில் இலச்சினையைப் பொறித்தார் முன்னோர்;
ஊரெங்கும் நிகழ்ந்தபொதுத் தேர்தல் நாளில்
உரைகாண முடியாத வெற்றி கண்டு,
பேருந்து வண்டிகளில் குறள்பொ றித்துப்
பெருநெறியில் குறள்நெறியைக் காட்டுகின்ற
சீருண்டு தமிழகத்தின் அரசுக் கென்றால்
சிதறுண்டு போனவர்கள் குறையும் சொல்வார்.

பாரெங்கும் படைகொண்டு சென்றார் அன்று
பண்புடைய தமிழ்கொண்டு செல்வார் இன்று;
பாரெங்கும் பெருவெற்றிக் களிப டைத்தார்
பண்டிருந்த மூவேந்தர் ஒளிப டைத்தார்;
பாரெங்கும் நானூற்றுத் தமிழ்ப டைத்துப்
பைந்தமிழ் அரசிங்கே ஒளிப டைக்கும்;
பாரெங்கும் தமிழினத்தின் பண்பைக் காட்டப்
பரசுதமிழ் மாநாடு நடத்திக் காட்டும்.

மன்னவனை உயிரென்றும், உயிரைத் தாங்க
மக்களையே உடலென்றும் புறத்திற் சொன்னார்;
அன்னவனை உடலென்றும், உடலில் தங்கும்
ஆருயிரே மக்களென்றும் சாத்தன் சொன்னான்;
பின்னவனைத் தொடர்ந்து தமிழ்க் கம்பன் பாட்டும்
பேசுவதை நாமறிவோம்; எனினும் அண்ணா
என்னுமொழி யாலழைக்கும் முதலமைச்சை;
இவ்வண்ணம் தமிழரசில் உறவு தோன்றும்.

புவிபுரக்க அரசிருக்கை அமர்ந்த முன்னோர்
பொலிவுமிகும் கவிபலவும் புனைந்து தந்தார்;
கவிபுரக்கும் சங்கத்தும் தலைமை ஏற்றார்;
காட்டுதற்குச் சான்றுபல இன்றும் உண்டு;
புவிபரக்க அரசிருக்கை இன்று கொண்டோர்
புதுமைமிகும் கவிபலவும் புனைந்து தந்தார்;
கவிபரப்பும் அரங்கத்தும் தலைமை ஏற்றார்;
காலமெலாம் நம்மரபு நிலைத்து நிற்கும்.

அரசோச்சும் மன்றத்தில் அறம்உ ரைக்க
அவைக்களத்துப் புலவர்பலர் இருந்தார் அந்நாள்;
அரசாட்சி மன்றத்தில் பெருமை நல்க
அவைக்களத்துப் புலவரென இல்லை இந்நாள்;
முரசோச்சி ஒலியெழுப்பும் முதல மைச்சே
முறையோஎன் றுள்நினைந்தேன்; புலவ ரைத்தான்
அரசாட்சி மன்றத்தின் தலைவ ராக
அமைத்தமையால் குறைசொல்ல வழியும் இல்லை.

(தமிழகமுதல்வர் கலைஞர் தலைமையேற்றார்)
(சட்டமன்றத்தலைவர் புலவர் கோவிந்தன்)

மாரிக்கு நிகராகப் பொருளை வாரி
    வழங்கியருள் வள்ளல்பலர் ஆண்டார் அந்நாள்;
ஊருக்கு நலஞ்செய்யும் தொண்டர், இந்நாள்
    ஊராள வந்தமையால் வள்ளல் அல்லர்;
ஆருக்கும் ஈவதற்குச் செல்வர் அல்லர்;
    ஆனாலும் தமிழரசில் எளிய வர்க்குப்
பாரிக்கு நிகராக வாழ்வு நல்கும்
    பண்பாட்டைக் காக்கின்ற பண்பும் உண்டு.

களைத்திருந்த புலவனுக்கு முன்னே நின்று
    கவரியினால் மெல்லனவே வீசி, நெஞ்சம்
களித்திருந்த மேலவனைப், புலவர்ப் போற்றும்
    காவலனை, முடியரசில் அன்று கண்டோம்;
இளைத்திருக்கும் தமிழ்த்தாயின் வாட்டம் நீங்க,
    இனியதமிழ்ப் புலவர்சிலை கடலின் ஓரம்
நிலைத்திருக்க,ஆழிஅலைக் கையால் வீச,
    நிற்பதைநாம் தமிழரசில் இன்று கண்டோம்.

படைவலியால் வடபுலத்தை அன்றை வேந்தர்
    பகையாக்கிப் பணிவித்தார்; இன்றோ பேச்சு
நடைவலியால் நட்பாக்கிப் பணிய வைக்கும்
    நாவன்மை கொண்டிலங்கக் காணு கின்றோம்;
குடையுடைய மூவேந்தர் வீரம் ஒன்றே
    குறியாக மறங்காட்டி வந்தார் அந்நாள்;
நடையுடைய நாவேந்தர், கொள்கை ஒன்றே
    நடுவாகத் திறங்காட்டி வந்தார் இந்நாள்.

மாரிவளங் குன்றியக்கால் வான்பேர் அச்சம்,
மக்களுக்கோர் இன்னல்வரின் பெரும்பேர் அச்சம்,
பாரிதனைக் காக்கின்ற குடிப்பி றத்தல்
படுதுயரம் எனநினைந்து காத்தார்அன்று;
மாறியது பருவமழை, அதனால் எங்கும்
வறட்சிநிலை பரவியது கண்டு நெஞ்சில்
ஊறிவரும் பரிவுடனே ஒடி ஒடி
உறுதுயரம் துடைப்பதற்கு முனைந்தார் இன்று.

முன்னாளில் தமிழ்நாடு பொதுமை யின்றி
முடியரசாய்த் தனியரசாய் விளங்கக் கண்டோம்;
இந்நாளில் குடியரசாய் மலர்ந்த தேனும்
எடுப்பார்கைப் பிள்ளையென நிற்கக் கண்டோம்;
தன்னாட்சி செய்கின்ற உரிமை யின்றித்,
தாவென்று நடுவரசைக் கேட்டுவாங்க
அன்னார்பின் திரிகின்ற நிலையே கண்டோம்;
அதிகாரம் இல்லாத அரசே பெற்றோம்.

நடுவரசில் அதிகாரம் குவிந்த போதும்
நாகரிக அரசியலைச் சொல்லிக் காட்டிக்
கொடுவரிமை என்றுரத்த குரல்கொ டுக்கும்;
கூடிமகிழ் உறவுக்குக் கைகொ டுக்கும்;
கெடுதலையாய்ப் போராடும் உள்ளம் இல்லை;
கிளந்துரைத்து வாதாடும் நெஞ்சம் உண்டு;
விடுதலைக்குக் கேடுசெய்ய பகைகள் வந்தால்
வீறுடனே சீறிஎழும் நாடு காக்கும்.

எளியரென வலியரென இன்னும் இங்கே
　　இருக்கின்ற நிலையொழிக்கும் பணியில் நிற்கும்;
துளியளவும் வன்முறையை நாட லின்றித்
　　தோழமையால் பொதுவுடைமை பூக்கச் செய்யும்;
இழிவுடைய உயர்வுடைய சாதி என்னும்
　　இறுமாப்புக் கொள்கைகளைச் சுட்டெ ரிக்கும்;
தெளி வுடைய அறிவினராய் மாந்தர் எல்லாம்
　　திருவினராய்ச் சரிநிகராய் வாழச் செய்யும்

யானைகட்டிப் போரடித்து விளைச்சல் கண்டு
　　யாவருக்கும் நெல்லளந்த தமிழர் நாட்டில்
பானைகட்டிப் போரடிக்க வந்த பேர்க்கும்
　　படியரிசி யளப்பதற்கு முயலும் போது
மோனைகட்டி எதுகையிட்டுக் கவிதை யாத்து
　　முழுமனத்தாற் பாராட்ட மனமே யில்லார்
சேனைகட்டி எதிர்க்கின்றார்; சிறுமை யன்றோ?
　　செந்தமிழர் நாட்டுக்கு நன்மை யாமோ?

(பாரிவிழா, பறம்புமலை)
(28.4.1969)

# திருக்குறள் நம்மறை

நமக்கென ஒருமறை யுண்டு - அதை
நம்பி நடந்திடு நன்னெறி கண்டு

-நமக்கென

அமைப்பால் உயர்ந்திடும் அருட்பால் மருந்து
விருப்பால் அருந்தி இருப்பாய் திருந்தி

-நமக்கென

உடலில் படிந்திடும் அழுக்கினைத் துடைத்தனை
உளத்தில் மாசுகள் அடைந்திட விடுத்தனை!
மடமை அகன்றிட மாந்தனென் றுயர்ந்திட
வாழ்வினைத் துலக்கிடத் தாழ்வினை விலக்கிட

-நமக்கென

எதையெதை யோமறை என்றுநீ போற்றினை
என்பயன் கண்டனை இழிநிலை கொண்டனை!
கதைகளை நம்பினால் காண்பயன் ஒன்றில்லை
கருத்தினை வளர்த்திடும் திருக்குறள் படித்திடு
-நமக்கென

ஆயிரம் திருவிளை யாடல்கள் பாடினை
அம்மஒ! நீயும் ஆடல்கள் ஆடினை!
காயினைக் கவர்ந்தனை கனியினை மறந்தனை
கருத்தினில் ஒருகுறள் நிறுத்திடின் உயர்ந்தனை
-நமக்கென

**(2.7.1987)**

# ஒருமைப்பாடு

ஒருமைப்பா டென்றொருசொல் உரைக்கக் கேட்டோம்
ஒற்றுமைஎன் றொருசொல்லும் மொழியக்கேட்டோம்
இருமைக்கும் உள்ளதொரு வேறு பாட்டை
இனியமனம் படைத்தவர்கள் உணர்தல் வேண்டும்;
ஒருமைப்பா டென்றுரைத்தால் ஒன்று வாழும்
ஒற்றுமை என்றுரைத்தாலோ பலவும் வாழும்
உரிமைக்குக் குரல்கொடுப்போம் பலவும் வாழ
உறவுக்குக் கைகொடுப்போம் நாட்டைக் காக்க.

(2.3.1975)

# ஒற்றுமையும் ஒருமையும்

ஒற்றுமை எனவும் ஒருமை எனவும்
சொற்றிடும் இருசொலைச் சற்றிவண் நோக்குதும்
வேறுபடு பொருள்களைக் கூறிடும் அவற்றுள்
சாரும் பொருண்மை *தேறுதல் நம்கடன்
ஒன்றுடன் மற்றொன் றிணைவதே ஒற்றுமை
ஒன்றினுள் ஒன்று மறைவதே ஒருமை;
இணைந்தும் தனித்தும் இயங்குவ தொற்றுமை
அணைந்தபின் ஒன்றாய் அமைவதே ஒருமை;
மலைப்பினி வேண்டா மனத்தினிற் பொருந்த
இலக்கணச் சொல்லால் விளக்குதும் கேண்மின்;
பலபல எனுஞ்சொல் பகுக்கவும் இயலும்
கலகல எனுஞ்சொல் கலந்தே நிற்கும்;
முன்னதை அடுக்குத் தொடரென மொழிவர்
பின்னதை இரட்டைக் கிளவியென் றியம்புவர்;
அடுக்குத் தொடரென ஆகுவ தொற்றுமை
இரட்டைக் கிளவியென் றிருப்பதே ஒருமை;
இடர்ப்படல் தவிர்த்தினி இருவகைப் பொருளும்
மனத்தினில் தெளிகநும் மயக்கமும் விடுத்தே.

(1.1.1977)

---

*1. தேறுதல் - தெளிதல்.

# ஒற்றுமை உருப்படுமா?

வளமனை பலவும் வருபொருட் டொகையும்
உளநல் முதியோன் ஒருவன்; அவற்குக்
கற்றறி மக்கள் காளையர் நால்வர்
உற்றனர் மணம்பெறத் தக்கநற் பருவம்;
மகட்கொடை வேண்டி மருகும் நாளில்
நகத்தகும் நண்பன் நவின்றனன் சிலசொல்;
'நால்வரும் தனித்தனி நங்கையர் மணப்பின்
பாழ்படும் ஒற்றுமை; பழுதுறும் அமைதி;
வருத்தமும் குழப்பமும் வந்துனைச் சூழும்;
ஒருத்தியைக் கொணரின் ஒற்றுமை வாழும்;
பெண்டிர் நால்வர் சண்டைகள் இடுவர்
மண்டைகள் உடைபடும் அண்டையர் நகைப்பர்;
பலமொழி பேசும் பலப்பல மாநிலம்
நலமுற ஒற்றுமை நிலவுறச் சான்றோர்
ஒருமொழி கொணர்தலை உற்று நோக்குதி!
அறிவிலாச் செயலா அவரெலாம் செய்வர்?
அதனால் நீயும் அரிவை ஒருத்தியை
மதலை நால்வர்க்கும் மணமுடிப் பாயே!

(2.7.1979)

# எங்கே தமிழன்?

தமிழனைக் காணவில்லை-ஈன்ற
தாயகம் முழுவதும் போயெதிர் தேடினும்
-தமிழனை

இமிழ்கடல் வரைப்பில் எங்கணும் சென்றான்
இசையுடன் தன் கொடி ஏற்றினன் என்றார்
-தமிழனை

இந்துவென் றொருவன் என்னெதிர் வந்தான்
இசுலாம் எனவோர் இளைஞன் சொன்னான்
வந்துமற் றொருவன் கிறித்தவன் என்றான்
வருபவர் ஒவ்வொரு வகைவகை சொன்னார்
-தமிழனை

பார்ப்பான் முதலி பஞ்சமென் செட்டி
பள்ளொடு பறையெனப் பலபேர் சுட்டி
ஆர்த்தார் இனும்பல் லாயிரங் கொட்டி
ஆதலின் என்மனம் அலைந்தது சுற்றி
-தமிழனை

3.12.1982

# தமிழனா? இந்தியனா?

எடுப்பு

இந்தியன் என்றொரு தமிழ்மகன் சொன்னால்
அவன்தான் இங்கே ஏமாளி-கூத்தன்
இயக்கிட இயங்கும் கோமாளி -இந்தியன்

தொடுப்பு

உந்திய உணர்வால் தமிழனென் றேதனை
உரைப்போன் மானம் உயர்ந்துள திறனாளி-இந்தியன்

முடிப்பு

அவனே இந்தியத் தமிழனென் றிசைத்தால்
அடிமையென் றெழுதிய முறியாளி
புவிமிசைத் தமிழ இந்தியன் என்றே
புகல்பவன் சரிநிகர் சமனாளி -இந்தியன்

எப்பெயர் சூடுதல் ஒப்புமென் றாய்ந்தே
ஏற்றிட முனைபவன் பொறுப்பாளி
எப்பொருள் கூறினும் எவ்வெவர் கூறினும்
மெய்ப்பொருள் காண்பவன் அறிவாளி-இந்தியன்.

7.5.1987

# என் குறிக்கோள்

தமிழன் எனும்பெயர் சாற்றுங் காலைக்
குமையா உரிமை கொள்ளுவன் யானே;
இந்தியன் எனும்சொல் இயம்புங் காலை
உந்திய நட்பை உணருவன் யானே;
உலகன் எனும்பெயர் ஓதுங் காலைக்
கலகமில் லன்பைக் காணுவன் யானே;
விரிமனம் எனச்சொலி உரிமை யிழந்து
பிறபிற நினையிற் பேதையன் யானே.

1.2.1988

# ஏற்றம் பெறுமா இந்தியா?

தீண்டுதல் குற்றம்;தெருவிடை நடக்க
வேண்டுதல் குற்றம்; விழியாற் பார்ப்பது
மிக்ப்பெருங் குற்றம்; மிதியடி யணிந்து
நடப்பது குற்றம்; நாயினுங் கீழா
இந்திய நாட்டில் இப்படி ஒரினம்
சொந்த நாட்டில்நொந்து தவித்தது;
அடிமைப் புழுவெனப் படிமிசைக் கிடந்தது;
மிடிமையிற் பட்டது வேதனை யுற்றது;
சிந்தனை மாந்தர் நொந்தன ராகி
இந்த நிலை ஏன் ?என்றனர் ஏங்கி
"அவரவர் தலைவிதி" "ஆண்டவன் படைப்பிது"
"தவறில் சாத்திரம் தந்த நெறி"யென
ஓதினர் இறைவன் தூதுவர் என்போர்;
"தூதரைத் துரத்து"; தொழத்தகும் இறைவன்
மேதினி மாந்தரை மேலெனக் கீழெனப்
படைத்தனன் ஆகின் உடைத்தெறி அவனை;

சாத்திரம் இதுவெனில் ஆத்திரங் கொண்டு
போர்த்திறம் காட்டு பொசுக்கு நெருப்பில்;
மதவெறி தடையெனில் மதத்தை மாற்றெனப்
புதுநெறி காட்டிப் பொங்கினர் இருவர்;
தெற்கில் திராவிடப் பெரியார் ஒருவர்
வடக்கில் வாழ்ந்த அம்பேத்கர் ஒருவர்;
இருவர் தோன்றி எதிர்த்தன ரேனும்
சரிவரச் சமனிலை சார்ந்தில தின்னும்:
மாற்றம் வேண்டின் நூற்றுவர் வேண்டும்,
தூற்றும் மதவெறி சூழின்
ஏற்றம் பெறுமோ இந்திய நாடே?

21.12.1988

70-A

# தமிழர் திருநாள்

தைபிறக்க வழிபிறக்கும் என்பர் மேலோர்;
தமிழகத்து வழிவகுக்க வந்தாய் பொங்கல்!
பொய்யுறக்கம் கொள்கின்ற தமிழர் இந்நாள்
பொங்கியெழுந் தாற்பகைமை தீர்ந்தால் அஃதும்,
செய்புறக்கும் உழவோரை செங்கோல் தாங்கிச்
செந்தமிழ ஆட்சியினைச் செய்வர், நம்மோர்
கைசிறக்கும் கலைசிறக்கும் தொழில்சி றக்கும்
காலமெலாம் களிசிறக்கும் தமிழ்சி றக்கும்.

ந்தார்

எடார்

தங்குறிக்கோள் வெற்றிபெறும் வேளை யிற்றான்
தடையாகிப் பாரதமே நின்ற தம்மா!

# கண்ணீர்ப் பொங்கல்

துளைக்க வரும் துப்பாக்கிக் குண்டு கண்டும்
துணிந்தெதிர்த்தார் அஞ்சவிலை ஈழ நாட்டார்
வளைக்கவரும் படைகண்டும் கலங்க வில்லை
வரிப்புலியாய்ப் பாய்ந்தெதிர்த்து வாகை கொண்டார்
அழைத்தபடை அரவணைக்கும் என்று நின்றார்;
அமைதியெனும் பெயராலே குண்டு வீசித்
தொலைக்கவரும் நிலைகண்டே மயங்கு கின்றார்;
தோழமையே பகையானால் என்ன செய்வார்?

சிங்களத்துக் கொடுங்கோலால் அடிமை யாகிச்
சிக்குண்டு நலிந்துருகிப் பின்நி மிர்ந்து
வெங்களத்தில் வரும் விடியல் எனநி னைந்து
வேங்கையெனச் சினந்தெழுந்து போர்தொ டுத்தார்
ங/ தன்குலத்தோர் விழியிழந்தும் உயிரிழந்தும் #
தையலர்தம் கற்பிழந்தும் தயங்கா ராகித்
தங்குறிக்கோள் வெற்றிபெறும் வேளை யிற்றான்
தடையாகிப் பாரதமே நின்ற தம்மா!

இனப்பகையை எதிர்ப்பானா? அமைதி பேசி
எழும்பகையை எதிர்ப்பானா? ஈழ நாட்டான்
தனித்துலகில் நிற்கின்றான்; சிங்க ளத்தார்
தாங்குபடை கைக்கொள்ளத் தமிழன் மட்டும்
முனைக்களத்தில் வெறுங்கைய னாக நிற்க
முயல்வதனால் அமைதியுண்டோ? தமிழினத்தை
நினைக்குமுளம் பொங்குவதால் விழிகள் பொங்கி
நிலைகலங்கித் துடிக்கின்றோம் பொங்கல் நாளில்.

29-12-1987

# பொங்கல் விழா

## எண்சீர் விருத்தம்

கருநீலங் குழைத்தெடுத்துக் கரைந்து ஞாலம்
கண்ணுக்குப் புலனாகா வண்ணம் பூசிப்
பொருள்யாவும் மறைந்ததுபோல் உலகில் யாண்டும்
புகுந்ததனை விழுங்கிவரும் இருளின் கூட்டம்
மருளோடு வெருண்டோடச் செய்து, கீழை
வான்வெளியைச் சிவப்பாக்கிப் புதிய ஆட்சி
உருவாக்கி, விழித்தெழுந்தோர் நெஞ்சமெல்லாம்
உவப்பாக்கிச் செங்கதிரோன் தோன்றக் கண்டேன்

சிறைவிடுத்துச் சிறைவிரித்துச் செவ்வான் கண்டு
சிந்தைகளி கூர்ந்துபல விந்தை செய்து
உறைவிடத்துக் கிளைகடோறும் ஓடிஆடி
ஒலியெழுப்பும் புள்ளினைப்போல் என்றன் பிள்ளை
திரையுடுத்த துகில்விரித்த அணைவி டுத்துச்
சிறுவிழியின் இமைவிரித்துச் சிரித்தெ ழுந்து
குறைகுடத்துப் புனலொளிபோல் வாயால் நாவாற்
குரலெழுப்பித் தள்ளாடி திரியக் கண்டேன்.

செங்கதிரின் முகங்கண்டு பொய்கை தன்னில்
செவ்விதழ்தா மரைமுகமும் மலர்தல் போலப்
பொங்கிவரும் மகிழ்ச்சியினால் என்னை நோக்கிப்
பூங்கொடியின் இடையுடையாள் துணைவி நல்லாள்
துங்கமுகம் மலர்ந்தொளிர முறுவல் பூத்தாள்;
தூய்யபுனல் ஆடியதால் ஈரஞ் சொட்டத்
தொங்கிவரும் குழல் நுனியை முடித்துக் கட்டித்
தொடுத்தெடுத்த மலர்ச்சரத்தைச் செருகி வைத்தாள்

திங்கள்முகம் மிகப்பொலிய நெற்றி மீது
திலகமிட்டு மலர்விழியில் மையும் இட்டுத்
தங்கமென மின்னுமிழை பின்னி நெய்த
தகதகக்கும் காஞ்சிபுரப் பட்டு டுத்துப்
பொங்கலுக்கு நல்வரவு நவில்வாள் போலப்
புதுவகைய மாக்கோலம் இட்டு முன்றில்
எங்கணுமே மங்கலஞ்செய் தொளிர வைத்தாள்
இடையிடையே செம்மண்ணிற் கோலஞ் செய்தாள்

வாயிலெலாம் மாவிலையால் தோர ணங்கள்
வகைசெய்து முறைசெய்து *நால விட்டாள்
சேயிழையாள் ஓடிவிளை யாடும் என்றன்
சிறுமகனைப் பிடித்திழுத்துக் கொஞ்சிக் கெஞ்சி
வேயிணையும் மென்தோளில் தாங்கிச் சென்று
வெந்நீரை இளஞ்சூட்டில் இறக்கி அந்தச்
சேயினையும் நீராட்டி அணிகள் பூட்டிச்
செந்நிறத்துப் பட்டுடுத்தி மகிழ்ந்து நின்றாள்

* நாலவிட்டாள் - தொங்கவிட்டாள்

ஒப்பனைகள் மகவினுக்குச் செய்த பின்னர்
ஒண்டொடியாள் கடைக்கண்ணால் நோக்கி நின்றாள்
அப்பொருளை யுணர்ந்தெழுந்து புனலும் ஆடி
அவள்தந்த புத்தாடை யுடுத்து நின்றேன்
ஒப்பிலவள் முகமலரைத் தாளில் வைத்து
ஒருகொடிபோல் இடைநுடங்க வணக்கஞ் செய்தாள்
இப்பழமை எதற்கென்றேன் 'உம்மை யன்றி
எனக்கெனவோர் தெய்வமிலை அத்தான்' என்றாள்

செந்தமிழிற் சுவைகூட்டும் மொழிகள் பேசும்
தீங்குயிலே நானுனக்குத் தெய்வ மென்றால்
சிந்தையினை ஆண்டுகொண்ட நீயே எற்குத்
தெய்வமெனச் சொல்வதலால் வேறு காணேன்
இந்தவகை என்பதனால் பிணைந்து நின்றால்
இல்லறந்தான் பேரின்பம் இதனைவிட்டு
நொந்துழன்று திரிகின்றார் உலக மாந்தர்
நுண்மதியே! என்னுயிரே! வாழ்க என்றேன்

'வணங்குமெனை வாழ்த்திவிட்டீர் மற்றெ னக்கு
வரமெங்கே? பரிசிலெங்கே?" எனந கைத்தாள்
நுணங்கிடையே எனைவணங்கி நிற்கும் பாவாய்
நொடிப் பொழுதும் பரிசில்தரத் தயங்க கில்லேன்
மணங்கமழும் மலர்முகத்துச் சிறுவன் நின்றான்
மதிமுகத்தை மாறாமல் நோக்கு கின்றான்
கணங்கணமாத் தரவிருப்பம் ஆனால் அந்தக்
கள்வன்நமை விடுவானோ கண்ணே என்றேன்.

"பொங்கலுக்குத் தரும் பரிசா? நன்று! நன்று!
போங்களத்தான் இப்பொழுது சொன்ன தெல்லாம்
எங்களுக்கு வேண்டாவென் றோடி விட்டாள்;
இருநிலத்தை மெழுகிஅதிற் கோல மிட்டு
மங்கல நாள் தொழுதங்கே அடுப்பு மூட்டி
மஞ்சளிலே தொடுத்தப்புதுப் பானை ஏற்றிப்
பொங்கிவரப் பாலூற்றி முனைகள் தேயாப்
புத்தரிசி பச்சரிசி உலையி லிட்டு

முந்திரியின் பருப்பிட்டுக் கொடியில் காய்த்த
முதிர்கனியின் உணங்கலுடன் வெல்லங் கூட்டி
உந்திஅது பொங்கிவரப் பொங்க லிட்டாள்;
உளக்களிப்பால் பொங்கலோ பொங்க லென்று
செந்துவர்வாய்க் குரலெழுப்பிச் சங்கம் ஆர்த்துச்
செவ்வாழை யிலைவிரித்துப் படைத்த தன்மேல்
வெந்துருகும் நெய்யூற்றி உண்ண உண்ண
வேண்டும்வரை பரிமாறி மகிழ்ந்து நின்றாள்

மனைக்கினிய மங்கையவள் பொங்கி வைத்து
மனமுவந்து பரிமாற நான் சுவைத்துத்
தினற்கினிது திணற்கினிதென் றுண்டே னாகத்
தெரிவைமுகத் திதழ்சிறிது மலரக் கண்டேன்;
எனைத்திடர்கள் உற்றாலும் தனது ழைப்பை
இனியதொரு தன்படைப்பைப் பிறர்பு கழ்ந்தால்
மனத்துயரம் மாறிவிடும் மகிழ்வு தோன்றும்
மாநிலத்தின் இயற்கையிது வெனவு ணர்ந்தேன்

உறவினர்க்கும் உழைக்கின்ற தொழில்வல் லார்க்கும்
உற்றவர்க்கும் மற்றவர்க்கும் பகிர்ந்து பொங்கல்
உறவளித்தோம் மகிழ்ந்தளித்தோம்; பின்னர் அந்த
ஒண்டொடியை அருகழைத்தேன்; யாழெடுத்து
நறவெனக்கிங் கூட்டுதற்கு மீட்டு கென்றேன்
நங்கையவள் யாழெடுத்தங் கமர்ந்தாள் என்முன்
நிறம்வெளுத்த தாமரையாள் உருவைச் சான்றோர்
நிகழ்த்தியநற் கற்பனையை நேரிற் கண்டேன்

இடப்புறத்தே யாழ்சாய்த்துத் தாங்குங் காட்சி
எழிலைத்தான் என்னென்பேன்; விரைந்து சென்று
இடக்கையின் விரல்நான்கும் நடனம் ஆடி
ஏழிசையின் வகைமிழற்றும் திறந்தான் என்னே!
படக்கிடந்த யாழ்நரம்பைத் தெறிப்ப தற்குப்
படரும்வலக் கைவிரலின் நளினம் என்னே!
தொடக்கிடுமவ் விசைக்கேற்ப அவள்மு கத்தில்
தோன்றிவரும் மெய்ப்பாட்டின் வகைதான் என்னே!

மீட்டியநல் யாழிசையைக் கேட்டு மைந்தன்
மெய்ம்மறந்தென் மடியமர்ந்து சிலைபோல் தோன்ற,
ஊட்டியநற் சுவைமறந்து செயல்ம றந்தே
உலகினையும் மறந்திருந்தேன்; யாழின் ஓசை
காட்டியஓர் உலகினில்நான் மிதந்து வந்தேன்;
கனவுலகம் நனவுலகம் அறிய கில்லேன்;
பாட்டிசைக்கு மயங்காத மாந்த ருண்டோ?
படைத்தசெவிப் பொறிப்பயனைப் பெற்றேன் பெற்றேன்.

விழிப்பொறிக்கு விருந்தளித்தாய் காட்சி தந்து;
வீணையினால் விருந்தளித்தாய் செவிப் பொறிக்குக்,
குழைத்தெடுத்த பச்சரிசிப் பொங்கலிட்டுக்
கூர்சுவையால் வாய்ப்பொறிக்கு விருந்த ளித்தாய்;
தெளிர்த்தநரம் பிசைவிடுத்துக் கொவ்வைவாயின்
தேன்மொழியால் நின்குரலாற் பாடி யின்பம்
திளைத்திருக்கக் கருத்தினுக்கும் விருந்த ளிப்பாய்
செங்கதிர்க்கு வாழ்த்திசைப்பாய் மாதே என்றேன்.

குழைவித்த மென்னரம்பின் யாழ்விடுத்துக்
குரலிசையால் இனிமையினைச் செவியில் வார்த்தாள்,
மழைநிகர்த்த குழலிதன்வாய் மலர்த்துச் செந்தேன்
மாரியென இசைபொழிந்தாள்; முன்னர் மீட்டுக்
கழைபிழிந்த சாறெனுமா றிசைத்த யாழ்தான்
கலக்கமுறத் தோல்விபெற வென்றி கொண்டாள்;
கழைகொடுத்த குழலிசையோ எனம யங்கக்
களிகூர மிடற்றிசையால் நனையச் செய்தாள்

மனங்குளிர மேல்நடுகீழ் எனவு ரைக்கும்
வழிமுறையால் இன்னிசையை இசைத்துப் பின்னர்
*அனங்கவிழும் நடையுடையாள் பொருள்வி ளங்கா
அயன்மொழியின் இசைப்பாடல் ஒன்றெ டுத்துத்
தனந்தனந்தோம் தகிடவென முழங்கிக் கைகள்
தாளமிடப் பாடினாள்காண்; கேட்டு நெஞ்சம்
சினங்கெழும முகஞ்சிவந்து கைகள் கொண்டு
செவியடைத்தேன் உளந்துடித்தேன் நிறுத்து கென்றேன்

* அனங்கவிழும் - அன்னங்கவிழும்

நிறுத்தென்று நான் சொல்லி நிறுத்து முன்னே
நின்றதவள் வாய்ப்பாட்டு;பேதைப் பெண்ணே
பொறுத்திருக்கும் பண்பினுக்குத் தமிழனைப் போல்
பூமிதனில் யாங்கணுமே கண்ட தில்லை;
சுறுக்கென்று சொல்வதெனில் மானம் விட்டோர்
சூடுகெட்டோர் நமைப்போல யாண்டும் இல்லை;
கிறுக்கரெனத் தொழும்பரென அறிவு கெட்டுக்
கீழாகிப் பாழாகித் திரிகின் றோமே!

பாடுகின்ற நீதமிழ்ப் பெண் பாடல்கேட்கும்
பாவியும்நான் தமிழ்மகனே; ஆனால் இங்குப்
பாடுகின்ற பாமட்டும் தமிழே யில்லை;
பாரெங்கும் இக்கொடுமை கண்ட தில்லை:
நாடுகின்ற இசையரங்கில் பிறவரங்கில்
நன்மைமிகும் வானொலியில் கொடுமை செய்யும்
வேடுவர்கள் தமிழுக்குத் தீங்கு செய்யும்
வினைகாணும் பொழுதெல்லாம் நெஞ்சம் வேகும்

நல்லவரும் சான்றோரும் சொல்லிச் சொல்லி
நாடோறுங் கதறினுமே கேட்பா ரில்லை;
புல்லடிமைத் தொழில்செய்தே பழகி விட்டோம்;
புரியாத மொழிகேட்டு மழுங்கி விட்டோம்;
கொல்லரவு நச்சுமிழ்தல் போல நீயும்
கொடுமொழியால் இசைபாடி எனைவ தைத்தாய்
அல்லலுறச் செய்துவிட்டாய் பொங்கல் நன்னாள்
அகமகிழ்வைக் கெடுத்துவிட்டாய் எவரை நோவேன் ?

பழுத்தெழுந்த சினத்தைஎலாம் கொட்டி விட்டேன்;
பாவையவள் துடிதுடித்தே உங்கட் கென்ன?
புழுக்கலிலாப் பச்சரிசி வேண்ட மென்றேன்
புழுக்களுள பச்சைநிற அரிசி தந்து
முழக்குகிறீர்; உலையிட்டுப் பொங்க வைத்தாத்
மும்மடங்கு பொங்கிவரும் சீற்றம்' என்றாள்
முழங்கையில் தலைவைத்துத் துயிலும் என்னை
முழக்கிற்றுப் பாவைகுரல் விழித்தெழுந்தேன். #

கனவகத்தும் பெருங்கவலை; நனவ கத்தும்
கரைகாணாக் கவலைகளே சூழும் வண்ணம்
வினைவிளைக்கும் கொடியவரைக், கொள்ளைகொள்ள
வேளைதொறும் வஞ்சகங்கள் செய்து கொண்டு
தினவெடுத்துத் திரிபவரை ஒழிக்கும் நாள்தான்
திருநாளாம் எனவுரைத்தேன்; அவள்ந கைத்து,
"முனமெழுந்து நீராடி வருக" என்றாள்;
மொய்குழலின் ஆணைதனை ஏற்றுக் கொண்டேன்.

◆◆◆

அப்சினார் பயார்க்கில்தூர்
புதுக்கோட்டை
21.1.1967

# தீப்பொறி

தோற்றத்தால் முதல்மாந்தன், தொல்லுலகில்
முதன்மொழியைத் தோற்று வித்த
ஏற்றத்தால் முதல்மாந்தன், ஈடில்லா
நாகரிக இயல்பு காட்டும்
ஊற்றத்தால் முதல்மாந்தன், உயர்மறத்தைப்
போர்க்களத்தில் உணர்த்தி நிற்கும்
சீற்றத்தால் முதல்மாந்தன், சீர்மிகுத்து
வாழ்ந்தவன்றான் சிதறிக் கெட்டான்.

சாதிதரும் பிரிவுகளைச் சமயத்தின்
பொய்மைகளைச் சடங்கு தம்மை
ஒதிவருஞ் சழக்கர்களை ஓராது
நம்பியதால் உணர்வி ழந்தான்;
பாதிமதி உடையவனாய்ப் பாழ்பட்ட
வாழ்வினனாய்ப் பான்மை கெட்டான்
மேதினியின் மேல்மகன்றான் மேவலராற்
கீழ்மகனாய் வீழ்ந்து விட்டான்

வீழ்ந்தவனை மேலுயர்த்த வீறுபெறும்
　　வாழ்வுதர விழைந்து, தீமை
போழ்ந்தெறியப் பாட்டுலகிற் புகுந்திருக்கும்
　　புரட்சிமனப் பொன்னுச் சாமி
சூழ்ந்தெழுதும் ஒவ்வொன்றும் சுடுகின்ற
　　தீப்பொறிதான்; சொல்லும் பாடல்
தாழ்ந்தவரை உயர்த்திடுக தன்மானம்
　　வளர்த்திடுக தழைத்து வாழ்க

5-1-1984

மலேசியக் கவிஞர் பொன்னுசாமியின் 'தீப்பொறி' என்ற கவிதைத்தொகுப்பு நூலுக்கு எழுதிய வாழ்த்து

# நீர்ப்பானை ஓட்டையானால்...?

சாதிக்குச் சாதியிங்கு மோதிக் கொண்
   டழிகின்றசேதி யுண்டு
வீதிக்கு வீதியிங்குப் போதிக்கும்
   பள்ளிக்குஞ் சாதி யுண்டு
வாதிக்க வாயில்லை, வாழ்விக்க
   வழியில்லை, வாழ்ந்த நம்மைப்
பாதிக்கும் நிலையுண்டு பாழ்பட்ட
   பிரிவுண்டு பாராய் தம்பி!

பார்ப்பானைத் திட்டுகிறாய் பாடுபல
   படுகின்றாய் பயன்தான் உண்டா?
சேர்ப்பாரை ஒன்றாகச் சேர்க்காமல்
   செயன்முறையில் செய்து காட்ட
ஏற்பாடு செய்யாமல் எத்தனைதான்
   முயன்றாலும் என்ன கண்டாய்?
நீர்ப்பானை ஓட்டையடா! நிரப்புகிறாய்
   தண்ணீரை, நிறைதல் உண்டோ?

ஒன்றாக நாமிணைந்தால் ஊறுசெயும்
    பகைமையெலாம் ஒழிந்தே போகும்;
நன்றாக எண்ணிப்பார்; நாலாயி
    ரஞ்சாதி நமக்குள் வைத்தோம்
*ஒன்றாரும் புகுந்துவிட ஓட்டைகளை
    அமைந்துவிட்டோம்; உட்பு குந்தோர்
வென்றாள வழிசமைத்தோம்; வெறுங் கூச்சல்
    போடுகிறோம்; விடியல் காணோம்.

இனவுணர்வு நமக்குள்ளே எழுந்துவிடில்
    நமைப்பகைமை என்ன செய்யும்?
இனநலமே குறியாக எப்பொழுதும்
    அப்பகைவர் இயங்கு கின்றார்;
கனவுலகில் திரிகின்ற தமிழ்மகனே
    உண்மைநிலை கண்டு கொள்வாய்;
உனையொன்று வேண்டுகிறேன் உன்னினத்தை
    முன்னேற்ற ஒன்று சேர்வாய்

தமிழரெல்லாம் ஒன்றானார் தமிழர்க்குப்
    பகைவரெல்லாம் தாழ்ந்து போனார்
அமிழ்தனைய இம்மொழியை அகம்மகிழ
    என்செவியில் ஆரு ரைப்பார்?
இமிழ்கடல்சூழ் இவ்வுலகில்எந் தமிழர்
    சாதியினை எரித்தே விட்டார்
தமிழினந்தான் இனியுண்டு தலைநிமிர்ந்து
    வாழ்வரெனச் சாற்று வார்யார்?

* ஒன்றார் - பகைவர்

# விண்வெளிப் போருக்கா விஞ்ஞானம்?

அணுவைப் பிளந்திடும்ஆற்றலைப் பெற்றனன்
ஆறறி வேந்திய மாந்தனென்றார்-ஆய்வில்
நுணுகிப் புகந்திடும் நூலறி வாளனை
நூறு வகைப்பட வாழ்த்தி நின்றேன்.

பாருக்கு நல்லன வாய்த்திடு மேயெனப்
பச்சை மனத்தினுள் நச்சிநின்றேன்-அமைதி
வேருக்குள் பாய்ச்சினன் காய்ச்சிய நீரினை
வெந்து தளர்ந்துளம் மாழ்கிநின்றேன்

யாருக்கும் யாவையும் வாய்த்திடு மேயென
யானொரு கற்பனை செய்து கொண்டேன்-விண்ணில்
போருக்கு வல்லவன் யாரெனப் பார்த்திடப்
போர்ப்பறை கொட்டினன் கேட்டுநொந்தேன்

ஆடவர் அஞ்சிட மாதரும் அஞ்சிட
ஆங்கிளஞ் சேய்களும் அஞ்சிநின்றார்-எந்த
நாடரும் அஞ்சிட நாய்வெறி கொண்டதால்
நாளெலாம் அஞ்சியே வாடுகின்றார்

மண்ணுங் கெடுத்தனர் விண்ணுங் கெடுத்தனர்
வாரியின் நீருங் கெடுத்தனரே -தீய
எண்ணம் உடுத்தவர் என்னென்ன கேடுகள்
ஈங்கினும் செய்யப் படித்தனரோ?

விண்வெளிப் போருக்கோ விஞ்ஞானங் கற்றனர்
வேதனை நெஞ்சினில் விஞ்சுதடா-மக்கள்
பண்ணிய குண்டுகள் மக்களை மாய்த்திடப்
பாரதைக் கண்டு பொறுத்திடுமோ?

மக்களைக் கொன்றபின் மாநிலம் ஏதடா?
மாமதி யொன்றை மறந்தனரோ?-நம்மைக்
கொக்கென எண்ணினர் கொக்கரிப் போர்தமைக்
கூடி யெதிர்த்தல்நம் வேலையடா!

உலகிற் பிறந்தவர் ஒவ்வொரு மாந்தரும்
உரிமை படைத்தவர் உண்மையிதாம்-இங்குக்
கலகம் விளைந்திடின் காய்ந்து தடுத்திடக்
கையை உயர்த்துதல் வேண்டுமடா

உண்மையிற் போர்வெறி ஓட்டிட யாவரும்
ஒன்று திரளுதல் வேண்டுமடா-இந்த
எண்ணம் மிகுந்தவர் எம்மவர்தோழரென்
றெண்ணி நடந்திட வேண்டுமடா.

20-5-1987

# சான்றோர் செய்த பிழை

கற்றில ராகினும், மற்றுயர் குணநலன்
அற்றன ராகினும், அரும்பொருள் பெற்றவர்
முற்றநன் மதிப்பினைப் பெற்றிடல் காண்குதும்;
தமக்கென ஒருதொழில் தாங்கில ராகி
உமக்கும் எமக்கும் உருகுதல் போல
மயக்குறப் பேசிமறுநாள் மாறி
நாளொரு மேடையில் நடைபயில் அரசியல்
வாதியர் தமக்கும் வழங்குவர் மதிப்பு;
தடவிய பொடியால் தகதக முகத்து
நடிகர் தமக்கும் நன்மதிப் பளிப்பர்;
ஆன்றவிந் தடங்கிய சான்றோர் தமக்கோ
ஏன்தர மறந்தனர் ஏற்றநன் மதிப்பை?
பெரும்பொருள் தேடா திருந்தனர் அது பிழை;
அரசியல் ஒந்தி ஆகிலர் அது பிழை;
பொடியால் உடையால் புதுமெரு கேற்றும்
நடிகர் ஆகவும் நயந்திலர் அதுபிழை;
இற்றை நிலையினை எண்ணுங் காலை
பற்றி எரியும்என் பாழ்படு நெஞ்சே.

27-4-1978

# தேர்தல் நினைவு

இரவெனும் நங்கை வந்தாள்
என்விழி துயிற்ற எண்ணிப்
பிறையினிற் குளிரெ டுத்துப்
பிச்சியில் மணமெ டுத்து
வருமிளந் தென்றல் கொண்டு
வீசினள்; வைய மெல்லாம்
இருளிய பின்னும் என்றன்
இமைகளோ இணைய வில்லை.

தேர்தலை நினைந்து விட்டேன்
சிந்தையும் உறங்க வில்லை;
நேர்மையை அங்குக் காணேன்
பொய்ம்மையே நெளியக் கண்டேன்;
தேர்வரும் நாளைப் போலத்
தெருவெலாம் கூச்சல் கேட்டேன்
ஊர்வலம் பலவுங் கண்டேன்
உண்மையை காண வில்லை.

உண்மையை சிறிது மில்லார்
　　ஊரினை ஆள வந்தால்
கண்ணியம் நிலைப்ப தெங்கே?
　　கயமைதான் ஓங்கி நிற்கும்;
பெண்மையை விலைக்கு விற்போர்
　　கற்பினைப் பேச வந்தால்
மண்மிசை என்ன வாழும்?
　　மதியுளர் நகைப்ப ரன்றோ?

தடியடி குத்து வெட்டு,
　　தையலர் கற்பை யுண்ணுங்
கொடியரின் செயல்கள், கொள்ளை
　　கொலைகளுங் கூட லன்றி
விடியலா காணல் கூடும்?
　　விழிகளா துயிலும்? எங்கும்
இடியொலி கேட்ப தன்றி
　　இன்னொலி யாதுங் கேளேன்.

நாட்டினைக் கருத வில்லை
　　நலங்களும் விளைய வில்லை
வீட்டினைக் கருது வோரால்
　　வேறென்ன விளையு மிங்கே;
கேட்டுணர் வுடையோர் ஆண்டால்
　　கீழ்மைதான் விஞ்சும் இங்கே
நாட்டுணர் வுடையோர் வந்தால்
　　நலமெலாம் பொங்கும் பொங்கும்.

# விழா மட்டும் போதுமா?

## (பாவேந்தர் நூற்றாண்டு விழாவுக்குப் பாடியது)

நேற்றாண்ட மன்னவனை நினைவுறுத்தும்
　　தோற்றத்தாய், நினக்கு நாட்டில்
நூற்றாண்டு விழாவென்றார் நுவலரிய
　　மகிழ்வுற்றேன்; நுணுகிப் பார்த்தேன்
காற்றாண்ட திசையெல்லாம் கவிச்சுவையைப்
　　பரப்பலன்றிக் கருத்திற் கொள்ளார்;
ஏற்றாண்டு நின்கருத்தை ஏனின்னும்
　　செயற்படுத்தா திருக்கின் றாரோ?

பார்திருத்தப் பாடுபட்டாய் பகுத்தறிவை
　　வளர்த்துவிட்டாய் பாவின் வேந்தே
சீர்திருத்தப் பாமொழிந்தாய் சீரழிந்து
　　பாவுலகஞ் சிதைந்த தையா!
யார்திருத்தப் போகின்றார் யாப்புலகை?
　　மயங்குகிறேன் யாது செய்வேன்?
ஓர் பொருத்தம் இல்லாத உரைநடையைப்
　　பாடலென உரைக்கின்றாரே!

சரிந்துவிட்ட தமிழர்க்குத் தமிழியக்கம்
    எனும்நூலைத் தந்து சென்றாய்;
திருந்திவிட்ட தமிழரினிச் செயற்படுவர்
    என்றிருந்தேன் தெளிய வில்லை;
குருந்துவிட்ட மழலையர்க்கும் கொடுக்கின்றார்
    அயன்மொழியை; கொடுமை யன்றோ?
மருந்துவிட்டென் மனப்புண்ணை ஆற்றுவர்யார்?
    மானத்தை மறந்தே போனார்.

சாதிக்கு நீ கொடுத்த சாட்டையடி
    போதாதோ? தமிழர் இன்னும்
மோதிக்கொண் டழிகின்றார்; முற்போக்குப்
    பாதைசெல முயல வில்லை;
*மேதித்தோல் போர்த்தவுடல் மேதியினிற்
    பெற்றனரோ? மேடை யேறிப்
போதிக்க மட்டுமவர் மறப்பதில்லை
    பாழாகிப் போன மாந்தர்.

எவன்விட்டான் சாதியினை? எவன் செய்தான்
    கலப்புமணம்? எவனோ எங்கோ
தவறிவிட்டான் செய்துவிட்டான் தவிக்கின்றான்;
    மற்றவனோ சாதி தன்னைச்
சுவர்வைத்துக் காக்கின்றான் சொல்வீரங்
    காட்டுகிறான் துணிய வில்லை;
இவன்கெட்ட கேட்டுக்கு நூற்றாண்டு
    விழாவெடுக்க எழுந்தும் விட்டான்.

---

*மேதித்தோல் - எருமைத் தோல்

# நன்றி காட்டுக

கடவுளின் பெயரைச் சொல்லிக்
கட்டிய கதைக ளெல்லாம்
மடமையென் றெடுத்துச் சொல்லி
மாபெரும் போர் தொடுத்துக்
கடமையை ஆற்றி நின்ற
கதிர்நிகர் பெரியார் கொள்கை
சுடர்விடப் பாடி வந்த
தொழத்தகு பாட்டு வேந்தன்.

சுயமரி யாதைக் காரன்
சோர்வினை யறியா வீரன்;
மயலுறு பகைவர் நெஞ்சம்
மருண்டிடச் செய்யுந் தோளன்
நயமிகு தமிழர் பண்பில்
நஞ்சினைக் கலக்கும் வஞ்சக்
கயவரைச் சுட்டெ ரிக்கும்
கனல்பொழி விழிகள் கொண்டான்.

நறுக்கிய கருப்பு மீசை
நரிக்குண மாக்கள் வாலை
நறுக்கிடும் தோற்றம் காட்டும்
நற்றமிழ் மாந்தர் வாழ்வில்
குறுக்கிடும் பகைமை யெல்லாம்
குலைநடுங் கிடவே செய்யும்;
முறுக்கிய நரம்பில் நல்ல
முத்தமிழ்க்குருதி பாய்ச்சும்.

சொல்லிலே தேனும் உண்டு;
சுடர்விடு கனலும் உண்டு;
மெல்லவே தென்றல் பேசும்;
மீறிய புயலும் வீசும்;
நல்லமென் குயிலும் கூவும்
நடுவினிற் புலியும் பாயும்;
வல்லமை தமிழர்க் கிங்கே
வழங்கிடும் உணர்ச்சிப் பாடல்.

தமிழ்மொழி தழைக்க வேண்டின்
தமிழினம் நிமிர வேண்டின்
அமிழ்தெனப் பாட்டு வேந்தன்
ஆக்கிய பாடல் முற்றும்
தமிழரின் நெஞ்ச மெல்லாம்
தனியர சாட்சி செய்து
கமழ்ந்திட வேண்டு மிங்கே
களிநடம் புரிய வேண்டும்

பாரதிப் புலவன் நூலைப்
பரப்பிடப் பலரிங் குள்ளோர்;
பாரதி தாசன் பேரைப்
பகர்ந்திடச் சிலரே உள்ளார்;
ஊரவர் நன்றி யில்லார்
ஒருதமிழ் மகனைப் போற்றும்
சீரறி யாத மாந்தர்
செந்தமிழ் நாட்டில் உள்ளார்.

இத்தகு நினைவால் எங்கள்
எழிற்கவி வேந்த னுக்கு
முத்தமிழ் மன்றங் காண்க;
முன்னவன் புகழ் பரப்ப
மெத்தவும் முயல்க; அந்த
மேலவன் கருத்தும் பாட்டும்
இத்தரை முழுதுஞ் செல்க;
எழுச்சியைப் பரப்பி வெல்க.

◆◆◆

# கண்ணீரை யார் துடைப்பர்?

பாவெல்லாம் படையாக்கிப் பகைமை யோட்டும்
பாவேந்தே எங்குலத்தின் தலைவா இன்று
நாவெல்லாம் புலர்ந்திருக்க விழிநீர் சிந்த
நாடெல்லாங் கவிவாணர் திகைத்து நிற்கக்
கோவென்று வாய்ப்புலம்பக் கையற் றேங்கக்
கொற்றவனே கற்றவனே மறைந்தா விட்டாய் !
சாவொன்றும் புதுவதன்று தெரியும்; ஆனால்
தமிழன்னை கண்ணீரை யார்து டைப்பார்?

கவிஞரெனப் பேர்படைத்த எங்கட் கெல்லாம்
காவலன்யார்? செந்தமிழ்க்குத் தீங்கு செய்யப்
புவியிலெவர் நினைத்திடினுங் கனன்றெ ழுந்து
புலிப்போத்தாய்த் தனைமறந்து தமிழ்நி னைந்து
கவிபொழிய வல்லான்யார்? இனிமேலிங்குக் #
கவிதைக்குப் பரம்பரையைப் படைப்போன் யார்யார்?
இவையெல்லாம் நினையுங்கா லுணர்வு விஞ்சி
இறப்பென்னும் ஒருபாவி தொலைக என்போம்.

முழுநிலவே செங்கதிரே காலங் கண்டும்
மூவாத தமிழ்ப் பொழிலில் ஆடிவந்த
அழகொழுகும் இளமையிலே உலக மாந்தர்
ஆவியெலாங் குளிர்விக்குந் தென்றற் காற்றே
பழகுதமிழ்க் கனிமூன்றுஞ் சுவைத்துப் பார்த்துப்
பாடிவந்த பூங்குயிலே மறைந்தாய் நாங்கள்
அழுதழுதும் வாராயோ? மீண்டு மிங்கே
ஆடாயோ பாடாயோ? அந்தோ அந்தோ!

கண்மூடி வழக்கமெனுங் காட்டில் தோன்றுங்
கதைக்குதவாச் சாதிமதம் அடிவே ரற்றும்
எண்கோடிப் பழங்கொள்கைச் சருகு சுள்ளி
இழிவுதரும் அடிமையெனும் வெம்பல் வீழ்ந்தும்
மண்மூடிப் போகவெனச் சாடி வந்த
மாவலிமைப் பெரும்புயலே இடிமு ழக்கப்
பண்பாடி அணிதிகழும் பாவால் மின்னிப்
பழுத்தசுவை பொழிமுகிலே யாண்டுச் சென்றாய்?

எவ்விடத்தும் எப்பொழுதும் எவரி டத்தும்
எதுவரினும் உண்மையினை எடுத்து ரைக்கும்
செவ்வியநற் பெருமிதமும் அஞ்சா நெஞ்சும்
சேராரை நடுக்குறுத்துஞ் சீர்த்த நோக்கும்
கவ்வுமெழிற் றிண்டோளும் விரிந்த மார்பும்
களிறனைய பெருநடையுங் கொண்ட சிங்கம்
இவ்வுலகில் எங்கள்மனக் குகையில் வாழும்
எழுந்தெழுந்து முழங்கிவரும் எந்த நாளும்

இருட்புலத்திற் கவியுலகம் மூழ்குங் காலை
 எழுவெள்ளி பாரதியாய் வந்த திங்கே
மருட்புலத்தை மாய்க்கின்ற ஞாயிறாக
 மன்னவனே நீவந்தாய் அவன்பேர் சொல்ல;
உருப்பெற்ற கதிர்களென எம்மைப் போல்வார்
 உள்ளனரே ஆயிரவர் நின்பேர் சொல்ல;
செருக்குற்றே மொழிகின்றேன் அய்யமில்லை
 சிந்தையுளே நீயிருக்க எனக்கேன் அச்சம்?

வாழ்நாளிற் கவிஞனுக்கு வாழ்வே யில்லை
 வையத்துக் குறையென்றே சொல்வர்; அந்தத்
தாழ்வுரையைப் பெருங்குறையை மாற்றி விட்ட
 தகவுனக்கே தலைநகரில் வாய்த்த தையா!
வீழ்நாளின் பிறகடையும் பெருமை யெல்லாம்
 விழியெதிரே கண்டுவந்தாய் வெள்ளம் போல
ஆழ்கடலின் கரையருகே தமிழர் கூட்டம்
 ஆர்ப்புடனே விழவயர்ந்த களிக்கக் கண்டாய்.

இல்லறத்தைப் பல்கலையின் கழக மாக்க
 ஈடில்லாக் குடும்பவிளக் கேற்றி வைத்தாய்
சொல்லடுத்த தமிழ்வளர்க்கத் தமிழர்க் கெல்லாம்
 தூய்மைமிகு தமிழியக்கஞ் சொல்லி வைத்தாய்
புல்லிதழ்த்தேன் மலர்முதலா இயற்கை யூடு
 பொருந்தழகின் சிரிப்பெல்லாந் திரட்டித் தந்தாய்
சொல்லிருக்கும் பொருளிருக்கும் அணியி ருக்கும்
 சொற்றமிழில் பாண்டியனின் பரிச ளித்தாய்.

நறுந்தேனும் பசும்பாலும் கலந்து வைத்து
நற்கவியாம் முக்கனியை நறுக்கி யிட்ட
விருந்தாகும் நீதந்த கவிதை; மேலும்
விசையொடிந்த உடலகத்தில் வீரஞ் சேர்க்கும்;
பொருந்தாரைச் செவிசாய்த்துப் பொருந்த வைக்கும்;
புலவோய்நின் நறுங்கவிதைக் கவிகள் சாவா
மருந்தாகும்; செந்தமிழுக் குயிர்ப்பு நல்கும்;
வையத்துள் என்றென்றும் வாழும் அய்யா

எம்பாட்டன் பாரதிக்குத் தாச னானாய்
எம்மனைய கவிவானர்க் கரச னானாய்
நம்மாட்சி யவைப்புலவன் நீயே யாகும்
நாள்விரைவி லுண்டென்று நம்பி நின்றோம்
எம்பாட்டில் அவலத்தைச் சேர்த்து விட்டாய்
இரங்குகின்றோம் கண்ணீரைச் சொரிந்து நின்றோம்
தெம்பூட்டித் தமிழ்காக்க வழிகள் காட்டு,
திறமூட்டு கைநீட்டித் தொழுது நின்றோம்

பாரதிக்குத் தாசனெனப் பாருரைக்கும்
பாவலனே கவிக்குலத்துத் தலைவ ரேறே
யாருரைக்க வல்லார் நீ யிறந்தா யென்றே
யாமொல்வோம்; பாரதியும் இளங்கோ கம்பன்
பேரறிஞன் வள்ளுவனும் இறந்தா போனார்?
பெருமையொடு வாழ்கின்றார்; அவர்போல் நீயும்
பாருலகில் வாழ்கின்றாய் அய்யா எங்கள்
பாடலுக்கும் உயிரூட்டு வழியுங் காட்டு.

◆◆◆

# இன்பம் எது?

இவ்வுலகில் மக்களினம் விழைவ தெல்லாம்
இன்பமெனும் ஒன்றன்றி மற்றொன்றில்லை;
எவ்வுயிரும் இன்பினைத்தான் தேடித் தேடி
இளைத்தலுக்கக் காண்கின்றோம்; துன்பம் என்றால்
ஒவ்வுவதிங் கொன்றில்லை; முனிவர் தாமும்
ஒய்வின்றித் தவங்கிடந்து முயல்வ தெல்லாம்
அவ்வுலக இன்பத்தைப் பெறுதற் கென்றால்
அதன்பெருமை சொலற் கெளிதோ? அரிதே யன்றோ?

உலகியலின் உண்மைநிலை உணரா மாந்தர்
ஒப்பரிய இன்பந்தான் வாழ்க்கை என்பர்;
விலகரிய துன்பமுடன் கலந்த தைத்தான்
வியனுலக வாழ்க்கைஎனச் சான்றோர் சொல்வர்;
நிலவிவரும் இடரனைத்தும் நின்று தாங்கி
நிலைகலங்கா நெஞ்சுரத்தால் முயன்று, வெற்றி
குலவிவர வாழ்வது தான் இன்ப மாகும்
குறள்தந்த பெருமைமிகு நெறியும் ஆகும்.

வாழ்க்கையினை ஆறென்றால், நெறிப்படுத்தும்
வரம்பாகும் இருகரையாம் இன்ப துன்பம்
வாழ்க்கையினைச்சகடென்றால் இயங்கச் செய்யும்
வட்டமெனும் ஈருருளை அவ்வி ரண்டாம்;
வாழ்க்கையினை நாளென்றால் முழுமை செய்ய
வருபகலும் இரவுமென அவற்றைச் சொல்வோம்
வாழ்க்கையினில் இவ்விரண்டும் உண்டென் றெண்ணி
வகைதெரிந்து நடப்பவர்க்கே இன்பந் தோன்றும்.

ஏர்நடத்தி விதைவிதைத்து, நாற்றுப் பாவி
எருவிட்டுக் களையெடுத்து நாளும் நாளும்
நீர்கொடுத்துக் காத்திருந்து பாடு பட்டேன்
நெடுந்துன்பம் உறக்கண்டான்; அதனால் இந்தப்
பார்நடக்க உணவளித்து வள்ள லாகிப்
பசிகளைந்து வாழ்கின்ற இன்பங் கண்டான்
கூர்படைத்த அறிவாளர் பட்ட துன்பம்
கொடுத்தவையே நாம்நுகரும் இன்ப மெல்லாம்.

குறுமலர்க்கண் சிறுமகனைக் கொஞ்சும் தாய்க்குக்
கூடிவரும் இன்பத்திற் களவே இல்லை
கருவுயிர்க்கும் போதவள்தான் அடையும் துன்பம்
கணக்குண்டோ? பகலுக்கு வெம்மை என்றால்
இரவினுக்குத் தண்மையன்றோ? உலகில் என்றும்
இருகூறும் கலந்திருக்கும்; ஒன்றில் ஒன்றாம்
உறுதுயிர்க்கு மறுபுறமே இன்ப மாகும்
உற்றறிவார் தமக்கேஇவ் வுண்மை தோன்றும்.

இன்பமெது வெனவுணர்ந்து தெளிந்து சொல்ல
ஏவராலும் இயலாது போதும் போதும்
என்பதிலே காண்கின்றான் ஒருவன் இன்பம்;
எனைத்துநிதி பெற்றாலும் போதா தென்றே
தன்பெருவாய் திறந்தலைந்து பொருளைத் தேடித்
தவிப்பதிலே மற்றொருவன் இன்பங் காண்பான்;
மன்பதையின் மனத்தளவே ஆகும் அல்லாள்
மதிப்பிட்டுச் சொல்லுதற்கோர் வகையே இல்லை.

ஒருவனுக்குங் கின்பமெனத் தோன்றும் ஒன்றே
உறுதுன்ப மெனத்தோன்றும் மற்ற வர்க்கே;
ஒருநிலத்தில் இன்பமெனக் கொண்ட ஒன்றை
ஒதுக்கிடுவர் மறுபுலத்தில் துன்பம் என்றே;
பெருவிருப்பால் இஃதொன்றே இன்பமென்பார்
பிழையென்று மற்றொருவர் பிறிது சொல்வார்;
ஒருவருக்கும் புரியாத பொருளே யாகி
உலகிலது சுழன்றுவரக் காணு கின்றோம்.

தீப்பிழம்பின் உருண்டைஎனக் கிளர்ந்தெழுந்து
திரைகடலில் முகங்காட்டுங் கதிரோன், மாற்றார்
நாப்பொழிந்த இகழ்வுரையால் சினந்தெ ழுந்து
நண்ணாரைப் புறங்கண்ட போர்க்களம்போல்
மீப்படர்ந்த மேற்றிசையின் செக்கர் வானம்,
மெல்லியலார் முகம்போலப் பொலிந்து விண்மீன்
நாப்பணவரும் வெண்மதியம், அதைத் தொடர்ந்து
நண்ணிவரும் முகிலினங்கள் காட்சி யின்பம்.

மலருமெழில் வண்ணமலர் கண்ணுக் கின்பம்;
மருவிவரும் தென்றல்நலம் உடலுக் கின்பம்;
பலமலருள் விரிந்தமணம் மூக்கிற் கின்பம்;
பாடிவரும் வண்டொலியோ காதுக் கின்பம்;
நலமருவும் நறுங்கனிகள் நாவிற் கின்பம்;
நானிலத்துத் தோன்றுபொருள் அனைத்து மிங்குப்
புலனைந்தும் நுகரவரும் இன்ப மன்றோ?
பொருந்துசுவை நுகருங்கால் அளவு வேண்டும்

இரவுபகல் எனநோக்கா துழைத்துச் செல்வம்
ஈட்டிமிகத் தொகுப்பதிலே இன்பங் காண்பர்;
வரவுவரும் தொகைபலவாய் மிகுதல் கண்டு
வகுத்ததனை ஈவதிலே இன்பங்காண்பர்;
கரவுமனங் கொண்டொன்றும் நுகரா தெண்ணிக்
கணக்கிட்டே பொழுதெல்லாம் இன்பங் காண்பர்;
உரமுடைய நன்மனத்தர் ஈந்து நின்றே
உறுவறுமைத் துயர்வரினும் இன்பங் காண்பர்;

அளிப்பதிலே சிலர்க்கின்பம்; மற்றோர் வாழ்வை
அழிப்பதிலே சிலர்க்கின்பம்; நாடுவாழ
உழைப்பதிலே சிலர்க்கின்பம்; வஞ்ச கத்தால்
ஊரவர்தம் உழைப்பாலே உடல்வ ளர்த்துப்
பிழைப்பதிலே சிலர்க்கின்பம்; பொய்ம்மை பேசிப்
பிறர்நலத்தில் அழுக்குற்றுப் புறமுங் கூறிச்
செழிப்பதிலே சிலர்க்கின்பம்; வறுமைப் போதும்
செம்மைநெறி குன்றாமை சிலருக் கின்பம்

பாடுபட்டுப் பெற்றோர்கள் கல்விக் காகப்
பணமனுப்பச் செலவழித்துக் கூடிப் பாடிக்
கூடுவிட்ட பறவையென ஓடி ஆடிக்
கோலங்கள் பலசெய்து, வாங்கி வைத்த
ஏடுதொட்டுப் பாராமல், கண்வி ழித்தே
எக்களித்துத் திரிவதிலே சிலருக் கின்பம்;
நாடுகெட்ட நிலையுணர்ந்து, தமைநி னைந்து
நடப்பதற்கு முயல்வதுதான் நிலைத்த இன்பம்

நமதுதொழில் பயில்வதெனக் கடமை எண்ணி
நாட்டுக்கும் வீட்டுக்கும் நலம்வி ளைக்க
உமதறிவு, செயல், நினைவை ஆக்கல் வேண்டும்;
உலகும்மைத் தக்கவரென் றுரைக்கும் வண்ணம்
நமதுடைமை கண்ணியமென் றெண்ணி எண்ணி
நொடிப்பொழுதும் வழுவாமல் ஒழுகல் வேண்டும்;
குமையாமல் சிதையாமல் கட்டுப் பாடும்
கொண்டவராய் விளங்குவிரேல் இன்பந் தோன்றும்.

தொடங்குங்கால் துன்பமெனத் தோன்று மேனும்
துளங்காமல் தொடர்ந்திருந்து முயல்வீ ராயின்
மடங்கொன்று பேரறிவு வளரக் காண்பீர்;
மட்டில்லா இன்பநிலை தொடரக் காண்பீர்;
முடங்கியுள நம்நாடு நாளை உங்கள்
முகங்களைத்தாம் எதிர்நோக்கும்; அதனால் நெஞ்சில்
திடங்கொள்க பயின்றிடுக வெற்றி கொள்க
திருநாட்டில் நல்லாட்சி மலரச் செய்க.

கருத்தராவுத்தர் கல்லூரி, உத்தம பாளையம்
27.1.1967

# தட்டிஎழுப்பிய தலைவர்கள்

நிலைமண்டில ஆசிரியப்பா

தமிழக மாந்தரைத் தட்டி எழுப்பிய
தமிழினத் தலைவர் தம்புகழ் பாட
வேட்டெழுந் திங்கே பாட்டரங் கமைத்துக்
கூட்டி மகிழ்ந்தீர், கூப்பினேன் கைகள்;
எட்டுணை யாகினும் எழுமுணர் விலராய்ப்
பட்ட மரமெனப் பள்ளியிற் கிடந்து
கெட்டழிந் தோரைக் கிளர்ந்தெழுந் திங்கே
தட்டி யெழுப்பிய தலைவர் பற்பலர்;
பாரோர் இகழப் பான்மைகள் கெட்டும்
ஓரா திருந்தே உறங்கும் மாந்தரைப்
'பாமரர் விலங்குகள் பழுதுறு செவியர்
ஊமையர் குருடர்' என்றெலாம் உரைத்துத்
திட்டி எழுப்பிய திண்ணியர், நம்மைச்
சுட்டிய சொற்கள் சுடவே இல்லை;
சூடு சுரணை அனைத்துந் தொலைத்து
நீடு துயிலில் நிலைத்திருந் தோரை
"மடமையில் உழல்வீர் மானம் எங்கே?
கடையர் என்றுமைக் கழறுதல் கேளீர்;
சாதிகள் எத்தனை! சமயம் எத்தனை!
ஓதிய இவற்றை உறுதிப் படுத்தும்
வேதம் எத்தனை! வீணிற் படைத்த
கதைகள் எத்தனை! கடவுளும் எத்தனை!

சதையை வளர்த்தீர் மதியை வளர்த்திலீர்
மட்டிகள் போலினும் வாழ்வீர்’ என்றெலாம்
குட்டி எழுப்பினார் கூர்மதிப் பெரியார்
‘‘சிறுநரிக் கூட்டம் சிங்கக் காட்டில்
உரிமையிற் செங்கோல் ஒச்சுதல் முறையா?
*தரியலர் நுழைவால் தமிழகம் தாழ்ந்திடல்
சரியிலை இனிமேல் தமிழா! தலைநிமிர்!
உலகம் வியந்திட உயரிய பண்புகள்
பலபல கண்டது பண்டைத் தமிழகம்
அந்தத் தமிழகம் அடிமையில் வீழின்
இந்தப் புல்லுயிர் இருந்துதான் என்பயன்?
ஒருமுறை போகுமிவ் வுயிரை நாட்டின்
உரிமையைக் காத்திட உவப்புடன் ஈவோம்;
கீழைத் திசையில் கிளர்கதிர் விரித்துக்
காலைச் சுடரொளிக் கதிரோன் எழுந்தனன்
விழித்தன புல்லினம் விரிந்தன சிறகுகள்
கொழித்திடும் அலைப்புனற் குளந்தொறும் குலவிடும்
தாமரைப் பூக்கள் தம்முகம் மலர்ந்தன;
காமலர்க் கொடிகள் கண்மலர்ந் தசைந்தன;
அஞ்சிறைத் தும்பி செஞ்சுவைக் கொழுந்தேன்
கொஞ்சிக் கொஞ்சிக் குடித்துச் சுவைத்துப்
பாணர் யாழெனப் பாடிப் பறந்தன;
யாணர்ப் புத்துணர்வு யாண்டும் விரிந்தன;
ஆவினம் மாவினம் அன்புப் பெருக்கால்
தாவின மாங்குயில் கூவின யாங்கும்;
நீயோ இன்னும் நீள்துயில் கொண்டனை;

*தரியலர் - பகைவர்

*பாயா வேங்கையின் நின்றிடல் பண்போ?
விழிஎழு சிறகை விரிபற உன்னினைப்
பழிதுடை தலைநிமிர் என்றெலாம் பகர்ந்து
பள்ளி யெழுச்சிப் பாடல்போல் பலப்பல
அள்ளித் தந்து துள்ளி எழுந்திடக்
கற்றவர் மெச்சும் காஞ்சிச் செம்மல்
உற்றுணர் வண்ணம் சொற்றவை பற்பல;
வடபுல மொழியால் வாடிய தமிழ்மொழி
விடுதலை பெறவே விளைத்தநற் போரால்
தனிமைச் சிறையில் தாம்துயர் உழந்தும்,
'இனிமைத் தமிழ்ப்பெயர் இருப்பதை நீக்கி
வடவர் பெயரை இடுவது முறையோ?
தமிழர் நாட்டில் தால்மியா புரமா?
உமிழும் செய' லென உருத்தெழு சமரில்
இரும்புப் பாதையில் விரும்பித் தலையைப்
பொருந்த வைத்துப் போர்மறங் காட்டியும்;
'வடபுலம் வாழுநர் உறவுடன் வந்தால்
தடையிலை; எம்முடைத் தடங்கை நீட்டி
வரவுரை கூறி வாழ்த்துவம் மகிழ்வோம்;
கரவுடன் வருவரேல் கைகள் மடங்கும்;
உரிமைக் குரல்கள் ஒங்கி முழங்கும்;
எரியுடன் ஆடேல்' என்றறை கூவியும்
நாடிப் புகழ்ந்தும் ஆடிக் களித்தும்
கூடிக் குலவிய குடிலர்கள் ஒடிக்
காட்டிக் கொடுத்த கயமைத் தொழிலால்
நாட்டில் நிகழ்ந்த நயவஞ் சகத்தை

---

*பாயா வேங்கையின் - வேங்கைமரம் போல்

நசுக்கி யழித்து நாவைப் பிடுங்கிப்
பொசுக்கி யெறிந்து புகழ்க்கொடி நாட்டியும்,
நெருக்கடி என்றொரு நெருப்பினை மூட்டி
வெறுப்புடன் அதனுள் வீசி எறிந்திடக்
குளிர்புனற் பொய்கையுள் குளித்தெழுந் ததுபோல்
ஒளிபடர் கதிரென உய்ந்திவண் வந்தும்,
மாற்றலர் பகழிகள் மார்பினிற் பாய
எற்றவை தாங்கி இமையா விழியொடு
போர்புரி மறவன் போலெதிர் நின்று
நேர்வரு பழிகளை நெஞ்சினில் தாங்கியும்,
அறிதுயில் கொள்வோர் உரிமையை உணர்ந்திட
முரசொலி எழுப்பி முழக்கினார் கலைஞர்;
"ஈங்கென்ன வேலை இந்தி மொழிக்குத்
தூங்கினர் தமிழர் எனவோ துணிந்தனர்?
முத்தமிழ் காக்க முனைந்தெழு தமிழா!
எத்தனைப் படைகள் இங்கே வரினும்
அத்தனை யுந்தூள் ஆக்குக நீக்குக
கொடியோர் செயலறக் கொலைவாள் எடடா!
இடியே றெனநீ ஏறுபோல் நடடா!
கொதித்தெழும் உனையிடுங் கொடுஞ்சிறைச் சாலை
மதித்துளம் மகிழ்ந்திடும் மாங்குயிற் சோலை;
தமிழரின் மேன்மையைத் தாழ்த்திடக் கருதும்
திமிரினை நொறுக்கித் தீயினிற் கொளுத்து
கூடார் உனக்குக் கோடி தரினும்
நாடேன் என்றுசொல் நாய்போல் அலையேல்
தமிழரின் மானமும் தமிழரின் வீரமும்
நமதிரு விழிகள் நண்ணிய இமைநீ;

தமிழ்மொழி ஆய்ந்த தமிழ்மகன் ஒருவனே
தமிழ்நா டாளத் தகுதி யுடையவன்;
* என்புகள் இடுவார் எவரோ அவர்பால்
அன்பினைக் காட்டி அலையும் விலங்கெனக்
கும்பி வளர்க்குங் குறிக்கோள் ஒன்றே
நம்பி வாழேல்; நாடே குறிக்கோள்"
என்றுபா வேந்தர் எழுப்பினர் பாடி
இன்றும் பற்பலர் இங்கே உள்ளனர்;
இராமன் கதையை இயம்பினன் கம்பன்
பராவினர் தமிழர் பரவியதவன் கதை;
ஆரியன் உயர்ந்தவன் திராவிடன் தாழ்ந்தவன்
எனுமொரு கருத்தை எங்கும் பரப்பினர்;
இனவுணர் வுடையார் இதனைப் பொறாது
திராவிடர் பெருமையைத் தெள்ளிதின் உணர்த்த
இராவண காவியம் இயற்றிக் காட்டி
இனவுணர் வூட்ட எழுதுக காவியம்
எனவுணர் வூட்டி எழுப்பினர் குழந்தை;
பணியை யிழப்பினும் பதவி யிழப்பினும்
அணிபெறுந் தமிழ்ன் ஆக்கமே இலக்கெனப்
போர்புரி மறவர் புலமிகும் இலக்குவர்
யாருரை தரினும் நேரிய தன்றெனின்
சீறி எழுவார்; சிறிதும் அஞ்சார்;
சீரிய நாட்டில் ஆரிய இந்தி
மீறி வருங்கால் வெகுண்டெழுந் தார்த்துப்
புலவர் படையைத் திரட்டிப் போர்க்குரல்
குலவிட முழக்கினர் அலறிய தரசும்

* என்புகள் -எலும்புகள்

உளநாள் முழுதும் உயர்தமிழ் காக்கும்
களமே கண்டவர் காட்டிய நெறிபல;
அன்பின் உருவம் அமைதியின் தோற்றம்,
பண்பின் உறைவிடம் பகையிலா நெஞ்சம்
கொண்டவர் செம்பொருள் கண்டவர் அவரைத்
தண்டமிழ் நாட்டார் தமிழ்ப்பெரி யாரெனக்
கொண்டுளம் மகிழும் கொள்கைச் சான்றோர்;
தொழிலோர் இயக்கம் தூய தமிழில்
எழுதியும் பேசியும் இயக்கிய தலைவர்;
அரசியல் விளக்கம் அன்னைத் தமிழில்
உரைசெய இயலா தென்றவர் *உட்க
அழகிய தமிழில் எழுதிய தமிழர்;
பழகிட நல்லவர் பைந்தமிழ் வல்லவர்
உலக ஒற்றுமை உள்ளக் கிடக்கை
ஆயினும் தம்மை ஈன்றதோர் அன்னைத்
தென்தமிழ் நாட்டைச் சிறிதும் மறந்திலர்;
இந்தி புகுந்திட எண்ணிய காலை
நொந்துளங் கனன்று நுவன்ற நல்லுரை
பொன்னிற் பொறித்துப் போற்றும் தகையன;
நன்னர் நெஞ்சால் நாடி இளைஞரை
'எழுக எழுக' என்றெழுச்சிகள் கூறித்
'தொழுக தொழுக தூய்தமிழ் அணங்கை
நாளைய உலகை நடத்தும் பொறுப்பு
காளையர் நுமது கடமை' என்றுரைத்துத்
தட்டித் தட்டி எழுப்பிய தலைவர்
சுட்டிச் சுட்டிச் சொன்னவை பலப்பல

* உட்க-வெட்கித் தலைகுனிய

"உயர்தனிச் செம்மொழி உமது தாய்மொழி
அயன்மொழிச் சொற்கள் அதனிடைக் கலத்தல்
மொழியின் தூய்மை அழியும் வழியாம்,
பழியிது தவிர்க, பைந்தமிழ் பேணுக,
தமிழ்மகள் மேனியில் தழும்புகள் செய்யத்
தமிழர் முனைவது தகுதி யன்றாம்;
நஞ்சின் *கலப்பால் நல்லதோர் கலப்பால்
துஞ்சும் நிலையினைத் தோற்றவித் தழிக்கும்;
ஆரியம் கலந்தால் அன்னைத் தமிழின்
சீரியல் அழியும் செம்மையும் மறையும்
பிறமொழிக் கலப்பினைப் பேணா தகற்றுக;
திறலுறு தீந்தமிழ் தெள்ளிதின் ஓம்புகென்
றுரைதரும் மறைமலை யடிகளின் வாய்மொழி
நிறைதுயில் கொள்வோர் நெடுஞ்செவிப் புகுந்தில;
ஆரிய இருளில் அகப்படும் உண்மையைச்
சீரிய வகையால் தெள்ளிதின் உணர்த்திய
செஞ்சுடர் ஞாயிறு தேவ நேயரை
விஞ்சிய மொழிநூல் மேலூர்க் காண்கிலம்;
நுழைபுலங் கொண்டு மொழிபல ஆய்ந்து
பிழையற வுணர்ந்து பிரித்தும் பகுத்தும்
வேர்ச்சொல் கண்டு விளக்கிடும் ஆண்மை
யார்க்கது வாய்க்கும்! யார்க்கது வாய்க்கும்!
தென்மொழிக் கடலுள் திளைத்துத் தோய்ந்து
பன்மணித் திரள்கள் பாருக் கீந்தவர்;
பொய்ம்மொழி யாளர்க் கவரோர் புலிதான்;

*கலப்பால் - கலம்+பால்

மெய்ம்மொழி யாளர்க்கு மேவிய குழந்தை
கூட்டில் அடங்காக் காட்டுப் புலிதான்
வீட்டில் எமக்கோர் கூட்டுக் கிளியே
தவத்தாற் கிடைத்த தமிழரின் சொத்து
மனத்தால் தொழுதவர் மலரடி போற்றுவோம்
கனிச்சுவை விஞ்சும் தனித்தமிழ் வளர
நுனித்தறிந் தெமக்கு நுவன்றவை பற்பல
திரைகடல் தாண்டி உறையுந் தமிழர்
உரிமை யுணர்வும் இனமொழி யுணர்வும்
பெருகிட யாண்டும் பிறங்குதல் காண்குதும்
சருகுக ளாகிச் சாய்வதே இல்லை
வருமிடர் பலப்பல வாயினும் வணங்கிலர்
ஒருமுக மாக ஓங்கிய குரலில்
ஓரணி யாகிப் போரணி வகுத்தனர்;
அமுத லிங்கனார் அவருள் ஒருவர்;
ஈழங் கண்ட இணையிலாத் தலைவர்;
தலைவர் பற்பலர் தட்டி எழுப்பினும்
கலைய வில்லை கண்துயில் இன்னும்
கும்ப கருணன் குலத்தவ ராகி
அம்புவி மாந்தர் ஆழ்துயில் கொண்டனர்;
மடமைகள் இன்னும் மறைய வில்லை;
கடவுளர் கதைகள் கலையவு மில்லை;
சமயப் பூசல் சரியவு மில்லை;
இமயம் குமரி இடைப்படு நாட்டில்
தொலைந்ததா சாதி ? தொலையவே இல்லை
தேர்தல் என்றொரு சேதி வருமெனில்
ஊர்வல மாக உலாவரும் சாதி

| | | | |
|---|---|---|---|
| தமிழ்தான் | எங்குந் | தழைத்ததா | என்றால் |
| உமியள | வேனும் | உயரவே | இல்லை |
| வானொலிப் | பெட்டி | வாயைத் | திறந்தால் |
| வீணொலி, | விளங்கா | வெற்றொலி | முழங்கும் |
| சுப்பிர | பாதம் | சுருதிகள் | ஸ்மிருதிகள் |
| தப்பினால் | இந்தி | தடபுடா | ஒலிகள், |
| தியாக | ராசர் | தெலுங்கிசைக் | கீர்த்தனை |
| இப்படிப் | புரியா | இசையொலி | கேட்கும்; |
| எப்படிப் | பொறுப்போம்? | இதுதமிழ் | நாடாம்! |
| தமிழகக் | கோவிலுள் | தலையை | நீட்டின் |
| தமிழொலி | அங்கே | தவழ்ந்திடக் | காண்கிலம் |
| இனமெனப் | பாரா | தெதிரெதிர் | நின்று |
| முனிவுறும் | ஞமலியின் | முறைப்பொலி | போலக் |
| கரகர | ஒலியே | காதில் | விழும் |
| திருமண | முறையிலும் | தெரியா | மொழிதான் |
| எங்கு | நோக்கினும் | எரிச்சலே | மிஞ்சும்; |
| பொங்கி | எழும்நாள் | புரட்சி | வரும்நாள் |
| இங்கே | தோன்றினால் | எம்மவர் | விழிப்பர் |
| பாடி | எழுப்பிற் | பயனே | இல்லை; |
| சாடி | எழுப்பின் | சற்றே | விழிப்பர், |
| பொங்குக | புரட்சி | பொங்குக | எழுச்சி |
| எங்கணும் | இன்பம் | தங்குக | இனிதே. |

பாவலர் மன்றம், ஈரோடு
12.1.1980

[illegible]

[illegible]

[illegible]

‘‘எனக்குப்பின் ...
கவிஞன்
முடியரசன்’’
—பாவேந்தர்
பாரதிதாசன்



‘‘திராவிட நாட்டின்
வானம்பாடி
கவிஞர் முடியரசன்’’
– பேரறிஞர்
அண்ணா

திரும்பிப்பார் உன்னினத்தை; புகழ்க்குன் றின்மேல்
தெரிவதைப்பார் அதன்பெருமை; பின்னர் இன்
விரும்பிப்பார் அவ்வினத்தை; வீழ்ந்து விட்ட
விளைவைப்பார்; தாழ்ந்துகெட்ட நிலைமை யைப்பார்;
துரும்பைப்பார் அதைப் போலத் தேய்ந்த தைப்பார்;
தோன்றும்பார் உன்னுளத்தில் ஓரு ணர்ச்சி;
இரும்பைப்பார் அதன்பின்னர்த் தோள்க ளைப்பார்;
எழுச்சியினால் மலரும்பார் இந்தப் பாரே.

[ முடியரசன் ]

தமிழ்மண் பதிப்பகம்,
சென்னை – 14.